146

46

Siranjeevigal of Kongunadu

(WITH ILLUSTRATIONS)

-7 APR 1941
MAD

[REVISED]

A. Doraiswamy Pillai
Junior Deputy Inspector of Schools
Sankarankoil

2686

E. M. GOPALAKRISHNA KONE

MADURA :: :: MADRAS

Copy Rights] 1941 [As. 5

கொங்கு நாட்டின்

சிரஞ்சிவிகள்

(திருத்திய பதிப்பு)

928.948111

A. துரைசாமி பிள்ளை

பாடசாலைகளின் ஜூனியர் டிப்டி இன்ஸ்பெக்டர்

சங்கரன்கோயில்

இ. மா. கோபாலகிருஷ்ணக் கோன்

மதுரை சென்னை

பதிப்புரிமை) 1941 (விலை அணா 5

031, 1w

Revised Edition 1941

Printed at the Excelsior Power Press, Madura.

முகவுரை

இச்சிறு நூலில் காணப்படும் வரலாறுகள் வெறும் கற்பனைக் கதைகள் அல்ல; காலமும், இடமுங்கொண்டு நிகழ்ந்த உண்மைச் சரித்திரங்களாகும். தமிழகத்தின் ஏனைய பிரிவுகளாகிய "பாண்டிய நாடு" "சோழ நாடு" "தொண்டை நாடு" களைப்போன்று, கொங்கு நாடும், முன்னாளில் பல வீரர்களையும், வள்ளல்களையும், புலவர்களையும், ஈன்றளித்துப் புகழ்கொண்டிருந்தது என்பது இச்சிறு நூலிலிருந்து ஒருவாறு விளங்கும். கொங்கு நாட்டில் பிறந்து, இறவாத புகழ் படைத்த பெரியார்கள் பலர் இருந்திருக்கின்றனர். "கொங்குமண்டல சதகம்" என்ற நூலில் இவை போன்ற நூறு வரலாறுகள் கூறப்பட்டிருக்கின்றன. அவற்றில் பன்னிரு வரலாறுகள் மட்டும், சிறுவர், சிறுமியருக்கேற்ப விளக்கிக் கதாரூபமாக இங்கு எழுதப்பட்டிருக்கின்றன.

பழயோர் பெருமையும் கிழமையும் கீர்த்தியும் நம்முடைய வாழ்க்கையை மேன்மையுற நடத்துவதற்கு ஆசையைத் தூண்டி ஊக்கத்தைக் கொடுக்கின்றன. நம்முடைய முன்னோர்களின் வாழ்கைச் சிறப்புகளைப் படித்தறிவதன் மூலம், நம் முன்னோர்களிடத்துப் பக்தியும், தாய் நாட்டின் மீது அன்பும் தாய்மொழிப் பயிற்சியில் அவாவும் ஏற்படுவது திண்ணம். அதிலும், குணமும், ஒழுக்கமும் உருவப்படுகின்ற பக்குவ மனோ நிலையிலுள்ள இளைஞர்கள் இத்தகைய சரித்திரங்களைக் கற்பதன் மூலம் அவர்

களுக்கு நாட்டபிமானமும், தாய் மொழிப்பற்றும் இயல்பாக ஏற்படுவதுடன், வீரம், தயை முதலிய நற்குணங்களும் பிடிபடும். நம் நாட்டுச் சிறுவர், சிறுமியர் அனைவரும் இவ் வரலாறுகளைப் படித்துப் பயன் பெறவேண்டும் என்பதே இந்நூலை எழுதியவரின் முக்கிய நோக்கம். சிறப்பாகக் கொங்கு நாட்டினர் ஒவ்வொருவரும் இச்சிறு நூலை அன்புடன் வரவேற்று, இதில் கூறப்பட்டுள்ள நம் முன்னோர்களின் வீர தீரச் செயல்களையும், வள்ளன்மை வரலாறுகளையும், நம் இளைஞர்கள் அறியும்படி செய்யவேண்டுமாகப் பணிவுடன் கேட்டுக்கொள்ளப் படுகின்றனர்.

A. துரைசாமி பிள்ளை.

பொருளடக்கம்

பாடம்		பக்கம்
1.	நன்னூலுரைத்த பவணந்தி	1
2.	குதிரை வீரன் குப்பிச்சி	5
3.	செங்குன்றூர்க் கிழார்	10
4.	காராளன் காளிங்கன்	14
5.	சூரிய காங்கேயன்	18
6.	சிங்களப் படை வென்ற கோப்பண மன்றாடி	23
7.	ஆனூர்ச் சர்க்கரை	27
8.	நல்ல சேனாபதி	33
9.	சம்மந்தச் சர்க்கரை	39
10.	தமிழுக்குத் தன் தலையையும் கொடுக்க இசைந்த வள்ளல் குமணன்	44
11.	பாலை பாடிய பெருங்கடுங்கோ	50
12.	அதிகமான் நெடுமான் அஞ்சி	55



பவணந்தி முனிவர் அரச சபையில் நன்னூல் சொல்லும் காட்சி

[ப. 1

கொங்கு நாட்டின்
சிரஞ்சிவிகள்

---

1. நன்னூலுரைத்த பவணந்தி

அமிழ்தினும் இனிய நந்தமிழ் மொழியைப் பிற நாட்டவரும், பிறமொழியாளரும், இன்றும் விரும்பிக் கற்கின்றனர். பழங்காலத்து, வடக்கிலிருந்து தமிழ் நாட்டில் குடியேறிய வட நாட்டு மக்களுள், தமிழைக் கற்றுத் தமிழ்ப் புலவரானவர் பலர். தமிழ் நாட்டுக்கு வந்த வட நாட்டு வேந்தர்களுள் சிலர் தமிழ்ப் பாஷையைக் கற்றறிய விரும்பினர்.

கொங்கு நாட்டின் வடக்கெல்லையில், மைசூர் இராச்சியம் இருக்கின்றது. மைசூரைச் சேர்ந்த குவளாலபுரம் என்னும் கோலாரில் சுமார் 700 வருஷங்களுக்கு முன் கங்க வம்சத்தினர் ஆண்டு வந்தனர். இவர்கள் கன்னடம் பேசுபவர். இவர்களில் ஒருவனான சியகங்கன் என்னும் அரசன்

*

தமிழ் படிக்கப் பெரிதும் ஆசைகொண்டான்; தமிழ்ப் புலவர் பலரைத் தன் இராசதானிக்கு வரவழைத்து ஆதரித்தான்; தமிழ் கற்கத் தனக்குள்ள ஆசையை அவர்களிடம் தெரிவித்தான். ‘தமிழ் இலக்கியம் கடல்போல் பரந்தது. அதன் சுவை தேனினும் இனியது. இலக்கியங்களின் அருமை பெருமைகளை யுணர்ந்து, சுவையறிய வேண்டுமானால் தொல்காப்பிய மென்னும் இலக்கணம் சிறிதாவது கற்றிருக்க வேண்டும். தமிழ் இலக்கணமோ விரிந்து கிடக்கின்றது. அதனை முற்றும் கற்றறிதல் சிரமமான காரியம். அரச காரியம் பார்க்கும் வேந்தனுக்குத் தொல்காப்பியம் கேட்டுக்கொள்ள அவகாசம் இருக்குமா!’ எனப் பலவாறெல்லாம் புலவர் யோசித்தனர்.

புலவர்களின் குறிப்பறிந்த அரசன், “தொல்காப்பிய நூலைச் சுருங்கச் சொல்லி விளங்க வைக்கும் வல்லமையுடைய புலவர் யாரிருக்கின்றனர்?” எனக் கேட்டான். “அவ்விதம் செய்யக்கூடிய புலவர் கொங்கு நாட்டில் சீனபுரம் (சனகாபுரம்) என்னும் ஊரிலிருக்கின்றார். அவர் பெயர் பவணந்தி முனிவர்; சமணர்; ஒரு துறவி; தம் ஆயுள் கால முழுவதையும் தமிழ் கற்பதிலேயே கழித்து வருபவர். அரசனுடைய ஆவலைப் பூர்த்தி செய்ய வல்லவர் அவர் ஒருவரே” என்று

புலவர் கூறினர். உடனே கொங்கு நாட்டுச் சனகாபுரத்து வசிக்கும் பவணந்தி முனிவரை அழைத்து வரும்படி, தண்டிகையுடனும் ஏவலாட்களுடனும் தன் பிரதானி யொருவனை அரசன் அனுப்பினன்.

முனிவரும், 'அரசனது ஆசை மிக்க நேர்மையானது. அதனைத் தீர்த்துவைத்தல் நம் கடன்' என்றெண்ணிக் குவளாலபுரம் வந்து சேர்ந்தனர். தமிழ் முனிவரைக் கண்ட மன்னன் சீயகங்கன், மிகுந்த அன்புடன் வரவேற்று, உபசரித்து, முனிவரிடம் தமிழ் மொழி பயிலத் தனக்கிருந்துவரும் பேரவாவையும், தொல்காப்பியம் என்னும் தமிழ் இலக்கணம் மிகவும் விரிந்திருப்பதால் தன்னைப் போன்ற சிற்றறிவினர் அதைக் கற்றறிந்து கொள்வது மிக அரிதாயிருப்பதையும் தெரிவித்து, அதில் கூறப்பட்டிருக்கும் எழுத்து முதலிய ஐந்திலக்கணங்களையும், யாவரும் மிக எளிதில் அறிந்து கொள்ளும்படி, சுருக்கமாக ஒரு இலக்கண நூலைச் செய்து கொடுக்கும்படி கேட்டுக்கொண்டான். அரசனது வேண்டுகோளின்படி, சமண முனிவர் பவணந்தியும் 'நன்னூல்' என்னும் பெயரால் வழங்கும் சிறந்த இலக்கண நூலை இயற்றிச் சீயகங்கன் மனமகிழச் செய்தார்.

பவணந்தி முனிவரின் 'நன்னூல்' இன்று தமிழ் கற்கும் மாணவர்களுக்குச் சிறந்த இலக்கணமாகத் திகழுகின்றது.

"திறமான புலமை யெனிற் பிற நாட்டார் அதை வணக்கம் செய்தல் வேண்டும்" என்று சுப்பிரமணிய பாரதியார் சொன்னது பவணந்தி முனிவரிடம் மெய்ப்பிக்கப்பட்டது.

2. குதிரை வீரன் குப்பிச்சி

பூந்துறை என்பது கோயமுத்தூர் ஜில்லா, ஈரோடு தாலூகாவில், ஈரோட்டிலிருந்து 8 மைல் தூரத்திலுள்ள ஒரு சிறு கிராமம். சுமார் 400 வருஷங்களுக்கு முன், ஒரு நாள் காலையில், இவ் வூர் வடக்குத் தலைவாசலில், சிவன் கோவில் முன் பாக ஜனங்கள் திரளாகக் கூடியிருந்தனர்.

"மாட்டையாக் குப்பிச்சி" என்னும் காடைக் குல வேளாள வாலிபன், ஆடை யாபரணங்கள் அணிந்து, அழகிய ஒரு குதிரையின் மீது உட் கார்ந்திருந்தான். குப்பிச்சியின் நண்பனும் வேலைக்காரனுமான "உப்பிலிய நல்லையன்" என்ற வாலிபனும் ஒரு குதிரையுடன் பக்கத்தில் நின்முன். இவர்களின் பெற்ருேரும் ஊர்ப் பெரியவர்களும் கூடி இவர்களை ஆசிர்வாதம் செய்து, "வெற்றியுடன் விரைவில் திருப்பிச் சுக மாக வருவீராக" என்று வாழ்த்தி வழியனுப்பி ஞர்கள். வாலிப வீரர் இருவரும் வடக்கு நோக்கி விரைந்து சென்றனர்.

அக்காலத்தில் கொங்கு நாடு விஜயநகர ராயர்களின் ஆட்சிக் குட்பட்டிருந்தது. ராயர் சமஸ்தானத்தில் மிகவும் வல்லவனுன ஒரு மல் லன் இருந்தான். அவன் விஜயநகர அரண்மனை

யின் அத்தாணி மண்டபத்திற்கு முன் வாசலில் ஒரு பக்கத்தில் உட்கார்ந்து, ஒரு சங்கிலியின் நுனியைத் தன் இடது காலில் கட்டி, மற்ற நுனியை வாசலின் எதிர்ப் பக்கத்தில் மாட்டி, வாசற் படிக்கு மேல் தோரணம் போல் தொங்க விட்டிருப்பது வழக்கம். அரசனைக் காண உள்ளே செல்பவர்கள், வல்லவர்களானால் இம் மல்லனை ஜயித்து உள்ளே போகவேண்டும். இல்லையேல் சங்கிலிக்குக் கீழ் குனிந்து செல்ல வேண்டும்.

ராயரிடம் ஒரு மசக்குதிரை இருந்தது. அது தன் மேலேறிச் சவாரி செய்பவர்களை ஊருக்கருகிலுள்ள ஏரியில் கொண்டுபோய்த் தண்ணீரில் தள்ளிவிட்டு வந்துவிடும் கெட்ட குணம் உள்ளது.

பூந்துறையிலிருந்து புறப்பட்ட வீரர் இருவரும் விஜயநகரத்தை யடைந்து, ஒரு சத்திரத்தில் தங்கினர்; அரண்மனை வாசலில் மல்லன் இருப்பதையும், ராயரைக் காணச் செல்லுபவர்கள், மல்லன் காலில் கட்டி உயரத் தொங்கும் சங்கிலித் தோரணத்தின் கீழ் நுழைந்து செல்ல வேண்டு மென்பதையும் தெரிந்தனர். குப்பிச்சி திடகாத்திரமும் அஞ்சா நெஞ்சும் படைத்த இளங்காளை; மல்லனுடன் யுத்தம் செய்யத் தீர்

மானித்துக் கொண்டு, மறுநாட் காலையில் அரண்மனை நோக்கிப் புறப்பட்டான்; அரண்மனை வாசலில் நின்று, மல்லனை யுத்தத்திற்கு அறை கூவினான். இருவரும் கடுமையாக யுத்தம் செய்தனர். மல்லன் தோற்றான்.

வெற்றிகொண்ட குப்பிச்சி, வாசலைக்கடந்து, அத்தாணி மண்டபம் சென்று, அரசனைக் கண்டு வணங்கி நின்றான். ராயர் அகமகிழ்ந்து, குப்பிச்சியைப் பார்த்து, "கொங்கு நாட்டிலிருந்து வந்திருக்கும் வாலிப வீரனே, நம்மிடம் ஒரு குதிரையிருக்கிறது. அதனையடக்கிச் சவாரி செய்து வருவாயானால் உண்மையிலேயே நீ மிகவும் கெட்டிக்காரனாவாய். உன்னால் முடியுமா?" என்று கேட்டார். ராயரின் நன்மதிப்பைப் பெற விரும்பி வந்திருக்கும் குப்பிச்சி, சிறிதும் தயங்காமல், "அப்படியே செய்து வருகிறேன்" என்று ஒப்புக்கொண்டான்.

குப்பிச்சி வெளிவாசலுக்கு வந்து நல்லையனிடம் விஷயத்தைச் சொன்னான். நல்லையன் நல்ல புத்திசாலி. குதிரை குளத்தில் இறங்காமலிருந்தால், குப்பிச்சி எப்படியும் அதை அடக்கிச் சவாரி செய்வான் என்பது அவனுக்குத் தெரியும். மசக் குதிரை தண்ணீருக்குள் போகாதிருக்க அவன் ஒருதந்திரம்செய்தான்; ஊருக்குள் போய்ச் சிறிது

சுண்ணும்புக்கல் வாங்கி வந்து, துணிப்பைகளில் போட்டுக் குதிரையின் அடிவயிற்றை யொட்டிக் கட்டினுன். பிறகு குப்பிச்சி குதிரையின் மீதேறினுன். மசக்குதிரை ஆட்டமிட்டுக் கொண்டு, ஊரை யடுத்துள்ள பெரிய ஏரியை நோக்கி விரைந்து சென்றது.

குதிரை வழக்கம் போல் கனைத்துக்கொண்டு தண்ணீரில் இறங்கியது. வயிற்றுக்குப் பக்கமாகத் தண்ணீர் வரவும், துணிப்பைகளில் கட்டியிருந்த சுண்ணும்புக் கல் நனைந்து கொதிக்க ஆரம்பித்தது. குதிரையைச் சூடு தாக்கவும் எரிச்சல் பொறுக்க முடியாமல் அது தண்ணீரை விட்டுக் கரையேறி ஓட்டம் எடுத்தது.

குப்பிச்சிக்குக் குதிரைச் சவாரி நன்ருய்த்தெரியும். எரிச்சல் பொருமல் அதிக வேகமாகச் செல்லும் குதிரையை அவன் திறமையுடன் நடத்தி, நகர வீதிகளிலெல்லாம் ஓட்டி அடக்கிச் சாதுவாக்கி, அரண்மனை வாயிலில் கொண்டுவந்து நிறுத்தினுன். யாவராலும் அடக்க முடியாத மசக் குதிரையைச் சாதுவாக்கிச் சவாரி செய்த வீரன் குப்பிச்சியை ராயர் அன்புடன் பக்கத்தில் இருக்கச்செய்து, குப்பிச்சியின் வீரத்தையும் யுக்தியையும் மெச்சினுர்; பூந்துறை நாட்டுக்கு அவனை அதிகாரியாக்கி, பொற்பல்லக்கு முதலிய விருது

குதிரைவீரன் குப்புச்சியும், நல்லையனும் விஜயநகரத்திலிருந்து விருதுடன் திரும்பி வரும் காட்சி [ப. 9

களுடன் அனுப்பிவைத்தார். குப்பிச்சியும் உப்பிலிய நல்லையனும் அரசனுடைய விருந்தினராக விஜயநகரத்தில் சில நாள் தங்கி, பிறகு தங்கள் ஊர் திரும்பினர்.

குப்பிச்சி பூந்துறை நாட்டின் அதிகாரியாக வெகு காலம் இருந்து, விஜய நகர அரசர்களுக்கு யுத்த காலங்களில் கொங்கு நாட்டு வீரர்களுடன் சென்று உதவி புரிந்து வந்தான்; சுண்ணும்புக்கல் கட்டிய மசக்குதிரை தண்ணீருக்குள் இறங்கா வண்ணம் உதவி புரிந்த நல்லையன் ஞாபகமாகப் பூந்துறையில் ஒரு மேடை கட்டிவைத்தான்; இம்மேடையில் உட்கார்ந்து உப்பிலியர்கள் நியாயம் பேசவும், மேலான ஜாதியார்கள் வந்தாலும் எழுந்திருக்காமல் உட்கார்ந்து கொள்ளவும் உரிமை கொடுத்தான்.

பண்டுதொட்டுச் சமீப காலம் வரைக்கும் கொங்கு நாட்டு மக்கள், போருக்கஞ்சாத வீரர்களாகவும், மல்யுத்தம், குதிரையேற்றம் முதலியவற்றில் சிறந்தவர்களாகவும் விளங்கினர் என்பது தெரிகிறது. அவர்களின் வழித்தோன்றல்களாகிய நாம், “எங்கள் மார்வலியும் தோள்வலியும் போச்சே! இன்று மண் வெட்டிக் கூலி செய்யலாச்சே!” என்று சொல்லும்படியாக வாழ்வது வருந்தத் தக்கதல்லவா?

3. செங்குன்றூர்க் கிழார்

செங்கோடு, செங்குன்று என்றால் சிவப்பு நிறமான மலை என்பது பொருள். சேலம் ஜில்லாவில் உள்ள "திருச்செங்கோடு" என்னும் ஊருக்குச் செங்குன்றூர் என்னும் பெயர் உண்டு. இவ்வூரில் உள்ள மலை செந்நிறமாகத் தோற்றுவதால் இதற்குச் செங்கோடு, செங்குன்று என்றும், இம்மலை யடிவாரத்திலுள்ள ஊருக்குச் செங்குன்றூர் என்றும் பெயர்கள் ஏற்பட்டன. கொங்கு தேசத்திலுள்ள மிக்க பழமையான ஊர்களில் இதுவும் ஒன்று.

சற்றேறக்குறைய இரண்டாயிர வருஷங்களுக்கு முன் இவ்வூரில் ஒரு பெரியவர் இருந்தார். இவர் வேளாளர் குலத்தில் பிறந்தவர்; தமிழ் மொழியில் மிகுந்த புலமை பெற்றிருந்தார்.

அந்தக் காலத்தில் பாண்டி நாட்டின் தலைநகரான மதுரையில் தமிழை வளர்க்கப் பேரவை ஒன்று இருந்தது. தமிழ் நாட்டிலுள்ள புலவர்களில் சிறந்தவர்களே மதுரைச் சங்கத்தின் புலவர்களாகச் சேர்த்துக்கொள்ளப்பட்டனர். அக்காலத்திருந்த புலவர் அனைவரும் "மதுரைச் சங்கப் புலவர்" என்னும் பட்டம் பெறுவதையே புலமை முத்திரையாக ஒப்புக்கொண்டிருந்தனர்.

புலவர் ஒருவரால் புதிதாக ஆக்கப்பட்ட ஒரு நூல் சங்கப் புலவரின் கூட்டத்தில் (பேரவையில்) அரங்கேற்றப்பட்டு, அவையாரால் ஒப்புக்கொள்ளப்பட்ட பிறகே பெருமைக்குரிய தாகும். அதன் பிறகே அந்நூலாசிரியரும் சங்கப் புலவர் என மதிக்கப்பெறுவர்.

கொங்கு நாட்டுப் புலவர் "செங்குன்றூர்க் கிழார்" மதுரைச் சங்கத்தாரால் மதிக்கப்பட்ட ஒரு புலவர். இவர் காலத்தில் திருமயிலையில் வசித்த திருவள்ளுவர் என்னும் புலவர் தாம் இயற்றிய "திருக்குறள்" என்னும் நூலை, மதுரைச் சங்கத்தார் முன் அரங்கேற்றக் கொண்டு வந்தார்.

சங்கப் புலவர்கள் எல்லோரும் கூடினர். திருவள்ளுவர் புதியவரானதாலும், இவருடைய பெருமை தெரியாததாலும், சங்கப்புலவர்கள் இவர் தங்களுடன் சமமாகச் சங்கப் பலகையில் இருப்பதற்குச் சம்மதிக்கவில்லை. திருவள்ளுவர், தம்முடைய நூலாகிய திருக்குறள் எழுதப்பட்டிருந்த ஓலைச் சுவடிக்காவது சங்கப் பலகையில் இடங் கொடுக்கும்படி பணிவுடன் வேண்டிக்கொண்டார். இதற்குப் புலவர்கள் சம்மதித்தனர்.

வள்ளுவர் தம் நூலைச் சங்கப் பலகையில் வைத்தார். உடனே தெய்வத்தன்மை பொருந்திய அந்தப் பலகையானது, வள்ளுவரின் "குறள்" சுவடிக்கு மட்டும் இடம் உள்ளதாகச் சுருங்கி விட்டது. பலகையில் வீற்றிருந்த புலவர்கள் எல்லோரும் அதை விட்டு இறங்கவேண்டி ஏற்பட்டது. புலவர் பலரும் ஆச்சரியமுற்றனர். அதன் பின் வள்ளுவர் தம் நூலை வாசித்துக்காட்டினர். குறளின் 1330 செய்யுட்களையும் கேட்டுப் புலவர்கள் வியந்து, ஒவ்வொருவரும் அதன் பெருமையைப் பாராட்டிப் பேசினர்.

கொங்கு நாட்டுப் புலவர் செங்குன்றூர்க் கிழாரும் திருவள்ளுவரின் திருக்குறளைப் புகழ்ந்தார். திருவள்ளுவரை யன்றி வேறு சிலரைப் புலவரென்று சொல்லுதல், நிலவு பிரகாசிக்கின்ற அந்தி நேரத்தை மாலை என்று சொல்லி, இருள் ஆழ்ந்திருக்கும் அந்தியையும் மாலை யென்றே சொல்வது போலாகுமென்று திருவள்ளுவரின் பெருமையை எடுத்துச்சொன்னர். அவர் சொன்ன வெண்பாவைக் கீழே காண்க:—

புலவர் திருவள் ளுவரன்றிப் பூமேற்
சிலவர் புலவரெனச் செப்பல்— நிலவு
பிறங்கொளிமா லைக்கும் பெயர்மாலை மற்றுங்
கறங்கிருண்மா லைக்கும் பெயர்.

மிக்க பழமையான அந்தக் காலத்தில் மதுரையில் தமிழ் வளர்க்கச் சங்கம் இருந்ததும், அதில் கொங்கு நாட்டு வேளாளர் ஒருவர் புலவராக இருந்ததும், கிழக்குக்கரையில் மைலாப்பூரில் வசித்த திருவள்ளுவர் நூல் இயற்றி, மதுரையில் சங்கத்தார் முன் அரங்கேற்றியதும் ஆகிய விஷயங்களிலிருந்து இரண்டாயிரம் வருஷங்களுக்கு முன்பே, தமிழகத்திலுள்ள தமிழர் அனைவரும், ஒரு சமூகத்தவராய்த் தமிழ்க்கலை வளர்ச்சியில் ஈடுபட்டிருந்தனர் என்று தெரிகிறோமல்லவா?

4. காராளன் காளிங்கன்

சுமார் 700 வருஷங்களுக்கு முன் கொங்கு நாடு மதுரைப் பாண்டிய மன்னரின் ஆட்சிக்குட்பட்டிருந்தது. கொங்கு நாட்டின் வாலிபர் பலர் பாண்டியரின் சேனு வீரர்களாகவும் இருந்தனர். இவர்களில் மிக்க கீர்த்தி வாய்ந்தவன் காலிங்கராயன். இவன் ஈரோடு தாலூகா, பூந்துறை நாட்டிலுள்ள வெள்ளோடைக் கிராமத்தில், வேளாளர் சமூகத்தில், சாத்தந்தை குலத்தில் பிறந்தவன்; இளவயதிலிருந்தே புத்தி நுட்பமும் மன உறுதியும் படைத்தவன்; அக்கால வழக்கப்படி பாண்டியனுடைய சேனையில் போர் வீரனுகச் சேர்ந்தான்; தன்னுடைய வீரச்செய்கைகளாலும், மதி நுட்பத்தாலும் வெகு சீக்கிரத்தில் சேனுபதியாக்கப்பட்டான்; காளிங்கராயன் என்னும் பட்டமும் பெற்றுன்; தான் பிறந்த பூந்துறை நாட்டின் அதிபதியாக நியமிக்கப்பட்டுப் பாண்டியனுடைய ஆட்சியில் மிக்க புகழுடன் இருந்து வந்தான்.

நமது காளிங்கன் நாட்டதிபதியாகி வாழும் நாளில் நாட்டில் கொடிய பஞ்சம் ஏற்பட்டது. கால மழை பெய்யாது பொய்த்ததால், நீர் நிலைகளெல்லாம் வற்றிக் கல்லைப் போல் நிலம்

காய்ந்து, நிற்க நிழலும் உண்ண நீரும் கிடை யாமல் ஜனங்கள் பரிதவித்தனர். விண்ணின்று வானம் பொய்த்ததால் விளைவில்லை. மாந்தர் உண்ண ஒன்றும் இன்றிப் பசியால் வாடினர். பலர் நாட்டை விட்டு வளம்பெற்ற வேறு நாடு களுக்குச் சென்றனர். பவானியிலும் காவிரியி லும் நீர் போய்க்கொண்டிருந்தது. குடி தண்ணீ ராவது குறைவின்றிக் கிடைக்குமென்ற நம்பிக் கையால், உட்கிராமங்களில் இருந்தவர்கள் ஆற் றங் கரைகளுக்குச் சென்றனர்.

நிலங்கள் சாகுபடியற்றுத் தரிசாய்க் கிடப் பதையும், ஜனங்கள் உணவின்றித்தவிப்பதையும், காவிரியிலும் பவானியிலும் நீர் பெருகிப் போவ தையும் கண்டு, காளிங்கன் மனங்கலங்கினன்; சிந்தித்தான்; எல்லாச் சம்பத்தும் பெற்ற இவன் தான் பிறந்த நாட்டுக்கும் தன் இனத்தவராகிய விவசாயிகளுக்கும் என்றென்றும் அழியாதிருக்க உதவும்படியாக, ஒரு காரியம் செய்து முடிக்க எண்ணினன்.

காளிங்கன் காவிரியின் கரை மீதுள்ள புன் செய் வனத்தை வயலாக்க ஆசைகொண்டான்; பவானி யாற்று நீர் காவிரியில் கலந்து, கொங்கு நாட்டிற்குப் பயனின்றிப் போவதைத் தடுக்க எண்

ணினன்; பவானியாற்றை இடைமறித்து அணை கட்டத் தீர்மானித்தான்; நாட்டிலுள்ள சிற்பிகள், கொல்லத்துக்காரர் முதலியோர்களை வரவழைத்து ஆலோசித்தான்; அவர்கள் யோசனைப்படி பவானி காவிரியில் கலக்கு முன்பாக அணையைக் கட்ட முடிவு செய்தான். அணையும் கட்டி முடிந்தது. அணைக்கட்டிலிருந்து 30 மைல் தூரம் பெரிய கால்வாயை அவன் வெட்டுவித்தான். வடி நீர் நொய்யல் நதியில் விழும்படி கொடிமுடி வரையில் கால்வாய் வெட்டப்பட்டது. புன்செய்க் காடாகக் கிடந்த சுமார் 20,000 ஏக்கர் நிலமும் நெல் விளையும் நன்செய் ஆயிற்று. நாடு செழித்தது. குடிகள் ஓங்கினர். யாவரும் காளிங்கராயனை வாழ்த்திக் கொண்டாடினர்.

வெள்ளோடைக் காளிங்கன் கட்டிய அணை, இன்றும் "காளிங்கராயன் அணை" என்னும் பெயருடன் அறுநூறு வருஷங்களுக்கு மேலாகியும் அழியாது இருந்து வருகிறது.

அவனல் வெட்டப்பட்ட வாய்க்கால் "காளிங்கராயன் வாய்க்கால்" என்ற பெயருடன் ஈரோடு தாலூகா நிலங்களைச் செழிக்கச் செய்து வருகிறது. காளிங்கராயன் அணையோரத்திலுள்ள ஊருக்குக் காளிங்கராயன் பாளையம் என்ற

பெயர் வழங்கிவருகிறது. இறவாத புகழ்படைத்த இக் காளிங்கராயனது சந்ததியார் இப்பொழுது பொள்ளாச்சித் தாலுகாவிலுள்ள ஊற்றுக்குளியின் பாளையக்காரராக இன்றும் இருந்து வருகின்றனர். இவர்கள் காளிங்கராயன் என்னும் பட்டப்பெயர் வகித்து வருகின்றனர்.

வெள்ளோடைக் காளிங்கனுடைய பூத உடல் இயற்கை நியதிப்படி அழிந்ததாயினும், அவன் புகழுடம்பு, கொங்கு நாடுள்ளளவும் சிரஞ்சீவியாக இருக்கும் என்பதில் என்ன ஆட்சேபம்?

5. சூரிய காங்கேயன்

சேர, சோழ, பாண்டியர் என்னும் மூவேந்தர், முன்னர் தமிழ் நாட்டை ஆண்டுவந்தனர். கீழ்க் கடலை யடுத்துச் சோழரும் தென் கடலை யடுத்துப் பாண்டியரும் மேல் கடலையடுத்துச் சேரரும் ஆட்சி புரிந்தனர். உள் நாட்டுப் பிரதேசமாகிய கொங்குமண்டலம், சிறிது காலம் தனி அரசுடையதாகவும் சிறிது காலம் சேர சோழ பாண்டியர்களில் வலி மிகுந்தவர்களால் கைக்கொள்ளப்பட்டு, அவர்கள் ஆட்சிக்குள்ளும் இருந்து வந்தது.

கொங்கு நாட்டுக்கும் சோழ நாட்டுக்கும் வடக்கிலுள்ளது நடு நாடு. மூவேந்தர்களின் இராஜதானிகளுக்கும் அதி தூரத்தில் எல்லைப் புறத்தில் இருந்ததால், இந்த நடு நாட்டின் வாண வம்சத்துச் சிற்றரசர்கள் முடியுடை மூவேந்தர்களில் எவருக்கும் கீழ்ப்படியாமல், யதேச்சையாக இருந்து வந்ததுடன், அடிக்கடி சோழர் சீமையிலும், பாண்டியருடைய கொங்கு நாட்டிலும் புகுந்து, குடிகளைத் துன்புறுத்தியும் வந்தனர்.

நடு நாட்டின் வாண அரசர்கள், சேலம் ஜில்லாவின் வட கிழக்கெல்லேயிலுள்ள ஆறகளூர் (ஆறு அகழ்களையுடைய ஊர்) என்னுமிடத்தைத் தலை நகராக்கிக் கொண்டிருந்தனர். சுமார் 750 வருஷங்களுக்கு முன் ஆறகளூரின் அதிபதியாக இருந்த வாண அரசன் மிக்க பராக்கிரமசாலியாக இருந்தான். இவன் மூவேந்தர்களையும் மதியாமல் கர்வம் கொண்டிருந்தான்; தன் ஆட்களுடன் கொங்கு நாட்டிலும் சோழ நாட்டிலும் புகுந்து, குடிகளைச் சூறையாடிப் போவான். அடங்காப் பிடாரியான ஆறைவாணனைப் பிடிக்க மூவேந்தர்களும் முயற்சித்தனர். இவனைக் கொல்லாமல் பிடித்துக்கொண்டு வருபவர்களுக்குத் தக்க சன்மான மளிப்பதாகப் பாண்டிய மன்னனுயிருந்த மூன்றுவது குலோத்துங்கன் தன் நாடெங்கும் பறை சாற்றுவித்தான்.

சேலம் ஜில்லாவைச் சார்ந்த மோரூர் கிராமத்தில் வேளாளரில் கண்ண குலத்தில் பிறந்த சூரியன் என்னும் பெயருடைய ஒரு வாலிபன் பாண்டியன் சேனையில் ஒரு சேனுவீரனுக இருந்தான். வாணனைப் பிடித்துவரும்படி பாண்டியன் அறிவித்த விளம்பரத்தைக் கேட்டு, இவ்வாலிப வீரன் பாண்டியனிடம் சென்று, தான் அந்த ஆறை நகர் வாணனைப் பிடித்து வருவ

தாகச் சொன்னான். பாண்டியன் மகிழ்ந்து சூரியனுக்கு வேண்டிய ஆட்களையும், இதர சாதனங்களையும் கொடுத்தனுப்பினான்.

சில நாட்கள் சென்றபின், ஆறை நகருக்கு ஆறு கூலி ஆட்கள் வேலை தேடி வந்தனர்; நகர் முழுவதும் வேலை தேடி அலைந்து, வாணன் அரண்மனையடைந்து, பல்லக்குத் தூக்குபவர்களாகச் சேர்ந்தனர். பல்லக்குத் தூக்கும் வேலையிற் சேர்ந்த புதிய ஆட்கள் மிக நல்ல பிள்ளைகளாக நடந்து, விரைவில் அரசனுடைய பல்லக்குத் தூக்குபவர்களாக நியமிக்கப்பட்டனர்.

பின்னும் சில நாட்கள் சென்றன. ஒரு நாள் வாணன் மாலைப்பொழுதில், அடுத்துள்ள ஒரு சிற்றூருக்குப் போகவேண்டிய அவசியம் ஏற்பட்டது. நம்பிக்கையுள்ள சில மெய்க்காப்பாளருடன் வாணன் பல்லக்கில் புறப்பட்டான். நகரை விட்டுப் புறப்பட்டுச் சில மைல் தூரம் சென்றதும், வழியில் ஒரு காட்டைக் கடந்து செல்லவேண்டியிருந்தது. மாலைச் சூரியன் மேற்கில் மறையும் சமயம், காட்டின் மத்தியில் பல்லக்கு வந்ததும், பல்லக்குத் தூக்கிகள் சிறிது களைப்படைந்தவர்கள் போல் பல்லக்கைத் தரையில் வைத்தனர்.



சூரிய காங்கேயன், வாணனோடு காட்டில் யுத்தம் செய்யும் காட்சி

[ப. 21

போயிகளின் தலைவன் சீழ்க்கை யடித்தான். உடனே காட்டினுள் பதுங்கியிருந்த வீரர் பலர் ஆயுத பாணிகளாகத் தோன்றிப் பல்லக்கை வளைத்துக் கொண்டனர். மோசம் வந்ததென் றுணர்ந்த வாணன் பல்லக்கை விட்டுக் குதித் தான். மெய்க்காப்பாளரும் வாணனும், பல்லக்குத் தூக்கிகளுடனும் காட்டில் பதுங்கியிருந்த வீரர் களுடனும் சிறிது கடும்போர் புரிந்தனர். மெய்க் காப்பாளர் அனைவரும் வெட்டி வீழ்த்தப்பட்ட னர். வாணன் கைது செய்யப்பட்டான்.

பல்லக்குத் தூக்கிகளின் தலைவனாக நடித்த சூரிய காங்கேயன், தன் ஆட்களுடன் வாண னைச் சிறைப்பிடித்துக் கொங்கு நாட்டிற்கு அன் றிரவே கொண்டுவந்து சேர்த்தான்; பாண்டிய மன்னன் அப்போது கொங்கு நாட்டிலுள்ள சங்ககிரி மலைக்கோட்டையில் தங்கியிருந்ததால் வாணனைச் சங்ககிரிக்குக் கொண்டுவந்து, பாண்டி யன் முன் நிறுத்தினான்.

பாண்டியன் அளவில்லா மகிழ்ச்சி யடைந் தான்; சூரியனுடைய வீரத்தைப் புகழ்ந்தான்; "வடகொங்கு மன்னவா" என்றழைத்தான்; "காங்கேயன்" என்ற பட்டம் கொடுத்து, எழு கரை நாட்டுக் கதிபதியாக்கினான்; ஆகவராம

பாண்டியன் என்ற தன்னுடைய விருது பெய ரையும், வேப்ப மாலையையும், மீனக்கொடியை யும், இன்னும் மற்ற விருதுகளையும் கொடுத்து உபசரித்தான்.

அது முதல் சூரிய காங்கேயன் பாண்டிய னது மதிப்புக்குரிய தேசாதிபதியாக, மோரூரி லும், சங்ககிரியிலும் இருந்து, நெடுநாள் கீர்த்தி யுடன் ஆட்சி புரிந்து வந்தான். இக்காங்கேய னுடைய சந்ததியார்கள் இன்னும் இருந்து வருகிறார்கள். சூரிய காங்கேயனுடைய பெரும் புகழைக் குறிக்கும் ஒரு பழம் பாடல் பின் வருமாறு:—

"மிண்டாமறை வாணனைமுன்
வெட்டாமற் பாண்டியனோ்
கொண்டுவந்து நிற்கவிட்ட
கொற்றவனு நீயலையோ
தெண்டிரைசேர் மோரூரிற்
றென்னன் மகுடாசலனே
மண்டலிகர் தேர்ந்துமெச்ச
வாழ்சூரிய காங்கேயனே."

6. சிங்களப் படை வென்ற கோப்பணமன்ருடி

சுமார் 725 வருஷங்களுக்கு முன் பாண்டியன் குலசேகரன் என்பான் மதுரையில் அரசு புரிந்து வந்தான். இவனைத் தொலைத்துவிட வேண்டுமென்று, இவனுடைய நெருங்கிய பந்துவான பராக்கிரம பாண்டியன் ஒரு சதி செய்தான். பராக்கிரமன், ராஜத்துரோகி யெனக் குற்றஞ் சாட்டப்பட்டுக் குலசேகரனுல் கொல்லப் பட்டான். பராக்கிரமனுடைய மனைவி மக்களும் கொல்லப்பட்டனர். பராக்கிரம பாண்டியனுடைய நண்பர் பலர் சிறையில் வைக்கப்பட்டனர். நாட்டில் அமைதி குலைந்தது. குடிகளிடை அதிருப்தியும் மனஸ்தாபமும் வளர்ந்தன.

இவற்றை யெல்லாம் ஒற்றர்கள் மூலம் அறிந்த இலங்கை மன்னன் பராக்கிரம பாகு என்பவன் இதுதான் நல்ல சமயம் என்றெண்ணிப் பாண்டி நாட்டின் மீது படை யெடுத்தான். இவனுடைய சேனுதிபதி இலங்காபுரி என்பவன் பலத்த சைனியத்துடன் பாண்டி நாட்டின் கடற்கரையிலுள்ள இராமேசுவரம் என்னும் தீவைப் பிடித்துக்கொண்டதுடன் கடற்கரையிலும் சிறிது பாகத்தைக் கைப்பற்றினுன்; தான்

கைப்பற்றிய நிலத்தில் ஒரு கோட்டையைக்கட்டி, அதற்குப் பராக்கிரம புரி என்று பெயரிட்டான்.

இலங்காபுரி, பராக்கிரம புரியில் சிங்களப் படைகளை வைத்து, சுற்றுப் புறமுள்ள பாண்டி நாட்டைச் சூறையாடினன். அவனது சிங்களப் படையை எதிர்க்க மதுரையிலிருந்து இரண்டு சேனைகள் அனுப்பப்பட்டன. அவைகள் சிங்களருடன் சண்டையிட்டுத் தோற்றன. தளகர்த்தர் இருவரும் சண்டையில் மடிந்தனர்.

தன்னுடைய சேனைகள் தோல்வியுற்றதைக் கேள்வியுற்ற குலசேகரன் மிகவும் கவலையுற்ருன்; தன்னிடமுள்ள சேனுபலத்தால் சிங்களப் படையை வெற்றிகொள்ள முடியாதென்றுணர்ந்தான்; நட்புக்கொண்ட வேறு அரசர்களின் உதவியை நாடினன்.

அக்காலத்தில் கொங்கு நாட்டை, குலசேகரனது மாமன் ராஜகேசரி வீர ராஜேந்திர சோழன் ஆண்டுவந்தான்; தனக்குப் படைத்துணை வேண்டுமென்று கொங்கு நாட்டு ராஜகேசரிக்கு ஓலையனுப்பினன். கொங்கு மன்னனது கொங்கர் படை அக்காலத்தில் மிகவும் பிரசித்தி பெற்றது. கொங்கு வீரர்கள் தீரர்களாகவும், போரில் புறங்கொடா வீரர்களாகவும் விளங்கி வந்தனர்.

பாண்டியன் சீமையைக் காக்கப் படை திரட்டப்பட்டது. கொங்கு நாட்டின் பல பாகங்களிலிருந்தும் வாலிப வீரர்கள் கிளைத்தெழுந்தனர். இந்த வீரப்படையின் ஒரு பெரும் பகுதிக்குச் சேனுபதியாகக் களந்தைக் கோப்பணன் என்னும் வீர சிகாமணி சென்றான். அவன் கொங்கு நாட்டின் பூர்வீகக் குடிகளான வாளரச வகுப்பினரில் ஒன்றான "பூவலியர்" (பூலுவர்) வகுப்பைச் சேர்ந்தவன்; பொள்ளாச்சித் தாலூகாவைச் சேர்ந்த களந்தை என்னும் ஊரில் பிறந்து, பெருங்குடித் தலைவனாகக் கீர்த்தியுடன் இருந்தவன்; தன்னுடைய ஆண்மையை விளக்கச் சமயம் வாய்த்ததென்று தன் தோழர்களுடன், கொங்குப் படையின் தளகர்த்தனாகப் பாண்டியன் சீமைக்குச் சென்றான்.

கோப்பணன், மதுரையைத் தாண்டித் தெற்கில் சென்று, திருக்கானப்பேர், தொண்டி, பாசி, பொன்னமராவதி, மணமேற்குடி முதலிய இடங்களில் சிங்களப்படையை எதிர்த்துச் சிதற அடித்தான். கொங்கர் படைமுன் எதிர்த்து நிற்கமுடியாது, சிங்களப்படை பாண்டிய நாட்டை விட்டு ஓடியது. பாண்டியன் பயந்தீர்ந்தான்; கொங்கப் படையின் சேனுபதியான கோப்பணனைப்பாராட்டிப்புகழ்ந்து பல சன்மானங்கள்

செய்து அனுப்பினான். இவனையும் இவன் சந்ததியாரையும் பாண்டிய மன்னர் தங்கள் புத்திரராகப் பாவித்து உபசரித்தனர். கோப்பண னுக்கு மன்றாடி என்ற பட்டம் அளிக்கப்பட்டது.

தன்னாடு திரும்பிய கோப்பண மன்றாடி பல ஆண்டு புகழுடன், வாழ்ந்து தன் சந்ததியார்க்கும் நாட்டுக்கும் அழியாப் புகழ் தேடி, இயற்கை முடி வெய்தினான். இவனது சந்ததியார்கள், விஜய நகரம், மைசூர், மதுரை நாயக்க மன்னர் முதலியவர்க்கும் பிற்காலத்தில் பல பேருதவிகள் புரிந்து கௌரவம் பெற்றிருக்கின்றனர்.

தற்காலம் இவர்கள் சந்ததியார் பொள்ளாச்சித் தாலூகாவிலுள்ள புரவிபாளையம் ஜமீன்தாராக இருக்கின்றனர். புரவிபாளையம் களந்தைக்கு மேற்கில் 15 மைல் தூரத்திலுள்ளது.

7. ஆனூர்ச் சர்க்கரை

கொங்கு நாட்டில் உள்ள மிகப் பழமையான குடும்பங்களில், கோயமுத்தூர் ஜில்லா, தாராபுரம் தாலூகாவில் உள்ள பழய கோட்டைப் பட்டக்காரர் குடும்பம் மிகவும் கீர்த்தி வாய்ந்தது. தற்காலம் பட்டக்காரராக இருப்பவர் இராய் பகதூர் "நல்லதம்பிச் சர்க்கரை உத்தமக் காமிண்ட மன்ருடியார்" என்பவர். சர்க்கரை என்பது இவர்கள் குடும்ப இயற்பெயர். இராய் பகதூர் என்னும் பட்டம் தற்போதுள்ள பட்டக்காரருக்கு இங்கிலீஷ் ராஜாங்கத்தால் கொடுக்கப்பட்டது. நல்ல சேனுபதி, உத்தமன், காமிண்டன், மன்ருடி முதலிய பட்டங்கள் இவருடைய முன்னேருக்கு, அந்தந்தக் காலத்துப் பாண்டியன், சோழன், விஜயநகர அரசர்கள் முதலியவர்களால் கொடுக்கப்பட்டவை.

பழைய கோட்டைப் பட்டக்காரருடைய முன்னேர்கள், பழைய கோட்டையிலும், அதற்கடுத்துள்ள (நத்தக்) காரையூர், ஆனூர் என்னுமிடங்களிலும் வசித்திருக்கின்றனர். ஆனூர் என்பதுவே இவர்களுடைய பழமையான வாசஸ்தலம் என்று தெரிகிறது. இவர்களுடைய குல

தேவதைக்கு ஆணூரம்மன் என்று பெயர். ஆணூரம்மன் கோவில் பழைய கோட்டைக்குச் சமீபத்தில் இருக்கிறது.

ஆணூர்ச் சர்க்கரையின் வம்சத்தவர்கள் அநேக அரிய காரியங்கள் செய்திருக்கின்றனர்; தமிழ்ப்புலவரை உபசரிப்பதிலும், எதிர்த்தோரை அடக்குவதிலும், எவரும் இவர்க் கிணையில்லை யென்னும்படி கீர்த்தி பெற்றிருக்கின்றனர்.

சுமார் 400 வருஷங்களுக்கு முன் இருந்த ஒரு சர்க்கரை யானவர் இழிகுலம் என்று சொல்லப்படும் ஒரு குலத்தைச் சேர்ந்த புலவர். ஒருவரை அவரது குலம் பற்றி இகழாது புலமைக்காக உபசரித்துப் புகழ்பெற்ற வரலாறு கீழே எழுதப்பட்டிருக்கிறது:

சேலம் ஜில்லாவில் திருச்செங்கோட்டில் கொங்கவண்ணர் வகுப்பைச்சேர்ந்த வீரபத்திரன் என்னும் புலவர் ஒருவர் இருந்தார். இவர் மிகுந்த அறிவாளி; கல்வி கேள்விகளில் சிறந்தவர்; கவி பாடுவதிலும் வல்லவர். அக்காலப் புலவர் வழக்கப்படி இவரும் பல நாடுகளுக்குச் சென்று, ஆங்காங்குள்ள பிரபுக்களிடம் தங்கிப் பிரசங்கம் புரிந்து தமிழறிவைப் பரப்பி வந்தார்.

ஒரு நாள் இப் புலவர் ஆனூர்ச் சர்க்கரையைக் காண வந்தார். சர்க்கரை, புலவரை வரவேற்று உபசரித்தார். பிரபுவும் புலவரும் உல்லாசமாகச் சம்பாஷித்துக் கொண்டிருந்தார்கள். சிறிது நேரம் உள்ளே சென்று வருவதாகப் புலவரிடம் சொல்லிவிட்டுப் பிரபு அரண்மனேக்குள் புகுந்து, அவசர காரியங்களேக் கவனித்துவிட்டுச் சிறப்பான விருந்துக்கு ஏற்பாடு செய்யும்படி சமயற்காரருக்கு உத்தரவிட்டனர். இதன் மத்தியில் வேலக்காரன் ஒருவன் வெளியில் வந்தவன் திண்ணேயிலிருந்த புலவரைப் பார்த்து, “ஐயா, சாப்பாட்டுக்குச் சிறிது தாமதமாகும்” என்று சொல்லிவிட்டுப் போனுன்.

இதைக் கேட்ட புலவர், “நம்மைப்பற்றி உள்ளே ஏதோ இழிவாகப்பேசி இருக்கிருர்கள். அதனுல் தான் இவ்வாறு இவன் சொல்லியிருக்கிருன். மரியாதைக்குறைவு நடக்கும் போல் தெரிகிறது. இவ்விடத்தில் தங்குவதும் சாப்பிடுவதும் தகாது’ என நினேத்து, உள்ளே சென்ற பிரபு திருப்பி வருமுன் வெளிச்சென்றனர்.

பிரபு வெளியில்வந்து பார்த்துப் புலவரைக் காணுமல் வருத்தங்கொண்டு அவரைத் தேடினர்; உணவு கொள்ளாமல் சோர்வுடன் திரும்பும்

புலவரை வழியில் கண்டு, "புலவரே, ஏன் திரும்பிச் செல்கிறீர்? யாரால் என்ன குறைவு உமக்கு நடந்தது? தெரிவியுங்கள்" என்று பரிவுடன் வேண்டிக்கொண்டார்.

புலவர் வருத்தத்துடன், "ஐயா, மதியாத இடத்தில் தங்குவதும் சாப்பிடுவதும் தகாது. உள்ளே சென்ற நீங்கள் சாப்பிடுவதாக வேலைக்காரர்களால் அறிந்தேன். எச்சிலைச் சாப்பிட எப்புலவனும் சம்மதியான். கேவலம் சாப்பாட்டுக்காக இவ்வளவுதூரம் தங்களைத் தேடி நான் வரவில்லை. வழியில் லக்ஷக்கணக்கான மனிதர்கள் இல்லையா? அவர்களிடம் ஒரு வேளை உணவு கிடைக்காதா? எல்லாரிடத்தும் புலவர் செல்கின்றனரா? தமிழுக்கும் தமிழ் வாணருக்கும் தங்கள் வீடு தாயகமாக விளங்குவதாகக் கேள்விப்பட்டன்றோ இங்கு வந்தேன். என் போன்ற புலவர் தங்களைத் தேடி வருவது தங்கள் கீர்த்தியை மேலும் மேலும் வளர்ப்பதற்கன்றோ? தங்களையும் தங்கள் முன்னோர்களையும் புலவர்கள் பாடிப் புகழ்ந்திரா விட்டால் இன்று நான் உங்களிடம் வந்திருக்க மாட்டேனல்லவா? அவ்வாறு வந்த என்னைக் கௌரவியாமல் தாங்கள் உள்ளே சென்று உண்ணல் தகுதியாமா? மதியாத இடத்தில் இருக்கவும் உண்ணவும் என் மனம் ஒவ்வ

வில்லை. அதனலேயே புறப்பட்டுச் செல்கி றேன்" என்று வருத்தத்துடன் புகன்றனர்.

தாம் உள்ளே சென்றபோது ஏற்பட்ட விப ரீதத்தை யுணர்ந்த பிரபு, மரியாதைக்குறைவாகத் தாம் ஏதும் சொல்லவில்லை என்றும், உண்மையை நிரூபிப்பதாகவும் கூறிப் புலவரைத் திரும்ப அழைத்து வந்து, ஒரு கொப்பரையில் நெய்யை ஊற்றிக் கொதிக்கக் காயவைத்துத் தம் கையை விட்டுச் சத்தியம் செய்தனர். புலவர் திருப்தி யடைந்தார். பின் இருவரும் உடனிருந்து உண்டனர்.

உண்ணும் போது, "புலவர்கள் எக்குடிப் பிறப்பினும், மரியாதைக் குரியவரென்றும், அறி வாளிகளின் பிறப்பு, குலம் முதலியவற்றைக் கவ னிக்கக் கூடாதென்றும், எல்லா ஜாதியிலும் அறி விற் சிறந்த பெரியோர் தோன்றுவரென்றும், உயர்ந்த குடியிற் பிறத்தலினுலும், மிகுந்த செல் வம் படைத்தலினுலும், ஒருவர் பெருமைக்குரிய வர் ஆகாரென்றும் பிரபு தம் உட்கருத்தைத் தெரி வித்தனர்.

பிரபுவின் சீரிய கொள்கையை உலகத்தார்க் கும் பேதையரான ஊழியக்காரருக்கும் வெளிப் படுத்திக்காட்ட எண்ணிய புலவர் "சர்க்கரையாரே,

நீர் காய்ச்சிய நெய்யில் கையை வைத்துச் சத்தியம் செய்தும், என் மனம் சாந்தியடைய வில்லை. அறிவாலன்றிப் பிறப்பினுல் உயர்வு இழிவு கொள்ளாத பெருங்குணம் உண்மையாக உம்மிடம் இருக்குமானுல் இப்பொழுதே என்னுடைய எச்சில் வாயைக் கழுவிவிடுவீரா?" எனக் கேட்டனர்.

சர்க்கரை மிக்க களிப்புற்று, இருவரும் உண்டு முடிந்ததும், புலவரின் எச்சில் வாயையும் கையையும் கழுவிவிட்டனர். வண்ணரப் புலவர் மட்டற்ற மகிழ்ச்சிகொண்டு, சர்க்கரைப் பிரபுவின் மீது ஒரு பிரபந்தம் பாடி, அவர் புகழை நிலை நாட்டினர்; சிலநாள் தங்கிப் பிரபு கொடுத்த பரிசில்களுடன் தம் ஊர் திரும்பினர்.

"தூசர்குல வாணனுக்கோர் சோர்வுரைக்க வில்லையென, நேசமுடனே காய்ந்த நெய்யதனிற் கையை விட்டோன்" என்று புலவரால் பாடப்பட்ட ஆனூர்ச் சர்க்கரையின் கீர்த்தி, தமிழ் மொழி புள்ளளவும் அழியாதன்றே?

8. நல்ல சேனபதி

சோழ அரசர்கள் பலம் பொருந்தியவர்களாயிருந்த காலத்தில் கொங்கு நாட்டைப் பிடித்துச் சுமார் 300 வருஷ காலம் ஆட்சி புரிந்தனர். ஆதித்தன், ராஜேந்திரன், ராஜ ராஜன் முதலான சோழ அரசர்களுக்குப் பின் வந்த அரசர்கள் அவ்வளவு பராக்கிரமம் உள்ளவர்களல்லர். நாளுக்கு நாள் சோழர்களின் வலிமையும், வீரமும், பெருமையும் குறைந்தன. கொங்கு நாட்டை யாண்ட பிரதிநிதிகள் பெயரளவில் சோழர்களின் ஆட்சியை ஒப்புக்கொண்டாலும் சுவாதீனமுள்ள தனி அரசர்களாகவே ஆண்டனர்.

இக்காலத்தில் பாண்டியர்களில் ஜடாவர்மன் என்னும் பராக்கிரமசாலியான ஒருவன் மதுரையில் பட்டத்துக்கு வந்தான். இவன் நாடு பிடிப்பதில் ஆசைகொண்டு, பெருஞ் சேனை திரட்டி, கொங்கு நாட்டைப் பிடித்துக் கொண்டான்.

சோழன், கொங்கு நாட்டின் ஆதிக்கத்தை மீண்டும் பெற எண்ணி, ஒரு படையுடன் கொங்கு நாட்டின் மீது படையெடுத்து வந்தான்.

கொங்கு நாட்டு மக்கள் சோழர் ஆதிக்கத்தை விரும்பவில்லை. முன்னம், சோழர்களின் நாட்

டதிகாரிகளாகவும் சேனுதிபதிகளாகவும் இருந்த கொங்கு தேசத்தலைவர்கள் பாண்டியன் ஜடாவர் மன் சார்பாகத் திரும்பி விட்டனர்.

இதைக்கண்ட சோழன் மிகுந்த கோபமுடையவனுகிக் கொங்கு நாட்டிலுள்ள ஊர்களைக் கொள்ளை யடிக்கவும் தன் படைகளுக்கு உத்தர விட்டான். சோழன் படைகள் காவிரிக்கரையிலிருந்து அமராவதி, நொய்யல் நதி தீரங்களிலுள்ள ஊர்களில் புகுந்து விளை நிலங்களை யழித்தும், வீடுகளைக் கொள்ளையிட்டும், ஜனங்களைச் சூறையாடியும் பலவாறு துன்பம் செய்தன.

மதுரையிலிருந்த பாண்டியன், படை திரட்டி யனுப்ப ஏற்பாடு செய்துவிட்டு, துரிதமாகச் செல்லும் குதிரை வீரனிடம் காரைக்கோனுகிய ஆணூர்ச்சர்க்கரைக்கு, "பெரும் படை பின்னுல் வந்து கொண்டிருக்கிறது. அது வரை அதிக நஷ்டம் ஏற்படாதபடி நாட்டைப் பாதுகாக்க வேண்டியது" என ஆணையிட்டு, ஓலை யெழுதிக் கொங்கு நாட்டில் தன் சேனுபதியாகிய ஆணூர்ச் சர்க்கரைக்கு அனுப்பிவைத்தான். காரைக்கோனுகிற ஆணூர்ச் சர்க்கரை கொங்கப் படையைத் திரட்டிக் கொண்டு, சோழனை எதிர்க்கச் சென்றுன்; தன் படையை அரண்செய்து ஓரிடத்தில்

இருத்திவிட்டுத் தான் மட்டும் தனிமையில் சோழனைக்காணச் சென்ருன்; சோழன் பாசறை யை யடைந்து தன்னை இன்னுனென அறிவித் துக் கொண்டான். சோழன் அவனை மதிக்க வில்லை.

ஆயினும் அவன் தான் கருதிவந்த காரியத் தைப்பின்வருமாறு தெரிவிக்க எண்ணி, "ஆதித் தன் வழித்தோன்றலே, தங்கள் முன்னேர்கள் எங்கள் நாட்டைக் கண்போலக் காத்து வந்தனர்; குடிகளின் கஷ்டங்களைத் தங்களுடையனவாக எண்ணி நீக்கி வந்தனர். உங்கள் நாட்டிலுள்ள சிதம்பரத்தைக் கனக சபை யாக்குவதற்கு வேண் டிய பொன் முழுவதையும் நாங்கள் கொடுத்தோம். உங்கள் நாட்டவர் பலர் எங்கள் நாட்டில் குடி யேறி வாழ்கின்றனர். அப்படியிருக்க, எங்கள் நாட்டைக் கொள்ளையிடுவது தருமமாகுமா? உங் கள் கொள்ளைப் படையால் கொங்கு நாட்டுக் குடிகள் மிகவும் அல்லற்படுகிருர்கள். தயவு செய்து ஏழைக் குடிகளையும், அவர்கள் குடும்பங் களையும் துன்பம் செய்யாதிருக்கும்படி உங்கள் படைகளுக்கு உத்தரவிடுங்கள். எதிர்த்து வரும் படையுடன் போரிடுவதே யுத்த நீதியாகும்" என்று மிகவும் வணக்கத்துடன் விண்ணப்பித் துக் கொண்டான்.

சர்க்கரையின் நீதி மொழிகளைச் சோழன் ஏற்றுக்கொள்ளவில்லை; அவ்வாறு உத்தரவிட முடியாதென்று இறுமாப்புடன் கடிந்து சொன்னான். "அரசரே, தங்கள் முன்னோர்களிடம் எங்கள் முன்னோர்கள் சேனுபதிகளாகவும் நாட்டதிகாரிகளாகவும் இருந்திருக்கிறார்கள். சோழ மன்னரும் நீதியுடன் ஆண்டு வந்தனர். இப்பொழுதோ அந்தச் சோழ அரசு நீதியை விட்டுக் கொடுங்கோன்மையாக மாறி விட்டது; குடிகளைப் பாதுகாப்பதொழித்து, அழிக்கத் தொடங்கி விட்டது. எங்கள் அருமையான நாடு அரசனுடைய அனுமதியின் பேரிலேயே கொள்ளைக் கூட்டத்துக்கு ஒப்படைக்கப்படுவதை இனிமேல் எங்களால் சகித்திருக்க முடியாது. நிரபராதிகளான குடிஜனங்கள் சூறையாடப்படுவதை நாங்கள் பார்த்துக் கொண்டிருக்க மாட்டோம். பாண்டியன் படை வரும் வரையிலும் வாளாவிருக்க உடன்படோம்" என்று சொல்லி விட்டுத் தான் தங்கியிருக்கும் இடத்தைச் சர்க்கரை யடைந்தான்; கூடியிருந்த ஜனங்களிடம் சோழன் கருணையின்றிக் கூறிய கடுமொழிகளைச் சொன்னான்.

"நாட்டையும் மானத்தையும் காப்பாற்றுவதற்கு ஆணாய்ப் பிறந்த ஒவ்வொருவனும் தன் உயிரைக் கொடுக்கத் தயாராயிருக்க வேண்டும்.

சேனபதி ஆனூர்ச்சர்க்கரை தன் வீரர்களை யுத்தத்திற்கு ஊக்கப்படுத்தும் காட்சி [ப. 37

நாளை சூரியன் உதிக்குமுன் சோழனுக்கு நல்ல பாடம் கற்பிக்கவேண்டும். இன்றிரவே உயிரைத் துரும்பாக எண்ணி என்னுடன் புறப்பட்டு வர எத்தனை வீரர்கள் தயாராக இருக்கிறீர்கள்?'' என்று சர்க்கரை வஞ்சினங் கூறித் தன் ஆட்களை ஊக்கப் படுத்தினுன்.

பொழுது விழுமுன், சுற்றுப் புறங்களிலிருந்து நூற்றுக் கணக்கான வாலிப வீரர்கள் வலிய வந்து சர்க்கரையின் படையில் சேர்ந்தனர். பொழுது விழுந்ததும் சர்க்கரை தன் சிறு படையுடன் புறப்பட்டுச் சோழன் படைகள் செருக்குற்றுக் குடித்துக் களித்துச் சோம்பியிருக்கும் நள்ளிரவில், திடீரென்று அவர்களைத்தாக்கிச் சின்னபின்னப் படுத்தினுன்.

சோழன் உயிர் தப்பி யோடினுன். படைகள் திசை தப்பிச் சிதறியோடின. படைகளில் எண்ணிறந்தவர்கள் வெட்டி வீழ்த்தப் பட்டனர். பிணங்கள் மலைபோல் குவிந்தன. இரத்தம் ஆருகப் பெருகிற்று. உயிருடன் சோழநாடு சேர்ந்தவர் மிகச் சிலர். சர்க்கரையின் படை சிறிதேயாயினும் வீரத்தோடு போர் புரிந்ததால் அது வெற்றி பெற்றது. சர்க்கரை பெற்ற இவ்வொப்பற்ற வெற்றியை ஒரு புலவர் பின் வருமாறு பாடியிருக்கிருர்:

" ஆறெலாஞ் செந்நீர்
அவனியெலாம் பல்பிணங்கள்
தூறெலாஞ் சோழன்
சுரிகுஞ்சி—வீறுபெறு
கன்னிக்கோன் ஏவலினல்
காரைக்கோன் பின்தொடர
பொன்னிக்கோன் ஓடும் பொழுது."

(அவனி—பூமி. கன்னிக்கோன் — பாண்டியன். காரைக்கோன் — ஆணூர்ச்சர்க்கரை. பொன்னிக்கோன் — சோழன்).

பயிற்சி பெருத குடிஜனப் படையைக் கொண்டு சோழனை வென்று, நாட்டிலிருந்து ஓட்டிய சர்க்கரையைப் பாண்டியன் மனமாரப் புகழ்ந்து பாராட்டிப் பல சன்மானங்கள் அளித்ததுடன், " நீயே என் நல்ல சேனபதி " என்று கூறிக் கௌரவித்தான்.

அது முதல் இவன் சந்ததியார்கள் 'நல்ல சேனபதி,' 'நல்லதம்பி' யென்ற பட்டத்தைத் தங்கள் பெயருடன் கூட்டிவைத்து வருகிருர்கள்.

9. சம்பந்தச் சர்க்கரை

மதுரையில் திருமலை நாயக்கர் அரசு புரிந்த காலத்தில் கொங்கு நாட்டில் கொடிய பஞ்சம் ஏற்பட்டது. காலந்தவறி மழை பெய்தும், மழையே இல்லாது போயும், நாடெங்கும் வளங்குன்றி, நீரும் நிழலும் அரிதாகிவிட்டன. கீழே பூமியையும், மேலே ஆகாயத்தையும் நம்பியிருக்கும் குடிகள், மழையில்லாது போகவும் மிகுந்த கஷ்டத்தை யடைந்தனர். பெருநிலக் கிழவரும், குறுநில மன்னரும், உடைக்கும் உணவுக்கும் தவித்தனர்.

இந்த நிலைமையில் அரசனுக்கு வரிகள் கொடுக்க வகையேது? காலாகாலங்களில் கட்ட வேண்டிய வரிகளைக் கட்டமுடியவில்லை. குடிகளின் கஷ்ட நிலைமையை மதுரையிலிருக்கும் மன்னன் அறியவில்லை. அக்காலத்தில் திருமலை நாயக்கரின் முக்கிய மந்திரியாயிருந்த தளவாய் ராமப்பையர் என்பவர், அரசனுக்குச் சேரவேண்டிய பகுதிப் பணத்தை வசூலிப்பதிலேயே கண்ணுங் கருத்துமாயிருந்தார்; குடிகளின் கஷ்டத்தைக் கவனிக்கவில்லை; வரிப்பணம் கொடாதவர்களை யெல்லாம் பிடித்துச் சிறையில் வைத்தார். கொங்கு நாட்டிலுள்ள பல பெரிய பிரபுக்கள் வரி

கொடாததற்காகச் சிறையில் வைக்கப்பட்டனர். சேலம் ஜில்லாவில் உள்ள சங்ககிரிக்கோட்டையில் முக்கியமான குடியானவர்கள் பலர் சிறை வைக்கப்பட்டனர். ஆணூர்க் குறுநில மன்னர் சம்பந்தச் சர்க்கரையும் வரி கொடாததற்காகச் சங்ககிரிக் கோட்டையில் சிறை வைக்கப்பட்டனர்.

சம்பந்தச் சர்க்கரை பரம்பரைப் பெருங்குடி வந்தவர்; சிறந்த தருமவான்; அடுத்தோரையாதரிக்கும் உத்தம குணம் படைத்தவர்; தமிழ்ப் புலவர்களுக்கு எக்காலத்திலும் இல்லையென்று சொல்லி யறியாதவர். இத்தகைய வள்ளல் சிறையிலிருப்பதை அறியாத புலவர் ஒருவர் இவரைக்காண ஆணூர் சென்றனர்; பிரபுவைக் காணது சங்ககிரிச் சிறையிலிருப்பதாகக் கேள்வியுற்றனர்; அங்கே சென்று காண்பதென்று தீர்மானித்துச் சங்ககிரிக்குப் போனர்; காவலாளிகளுக்கு நல்ல வார்த்தை சொல்லி உள்ளே சென்ருர். அங்கே சிறையிருந்தவர்கள், "புலவரே, பரிசு கேட்க வரும் இடம் இதுவா? இந்த இடத்தில் யார் என்ன உதவக்கூடும்? நல்ல சமயம் பார்த்து வந்தீர்!" என்று பரிகாசம் செய்தனர்.

புலவர், "ஐயா, இரப்பவர்க்கு இடம் ஏது? காலமேது? ஏற்ற காலமும் இடமும் வரும்வரை என் கஷ்டம் சகித்திருக்க முடியுமா? அவரை

பதமாவதற்குள் கடுகு பொரிந்து சாம்பலாகி விடுமே" என்று சொல்லிச் சர்க்கரையைத் தேடி யடைந்தார்.

புலவர் தம்மைத் தேடி வருவதைக் கண்ட பிரபு, அவரை அன்புடன் வரவேற்று, மார்புறத் தழுவிக் கண்களில் நீர் ததும்ப, "என்னிடம் அன்புகொண்ட பெரியாரே, நீங்கள் இச்சிறைச் சாலைக்குள் வருவதற்கு எவ்வளவு சிரமப்பட்டீர் களோ? இவ்வளவு சிரமத்தையும் பாராது என்னைக் காண வந்த தங்கள் அன்பை நான் என்றும் மறவேன்" என்று பலவாறு உபசாரம் சொல்லித் தம்முடன் இருந்த வேலைக்காரன் ஒருவனை வெளியில் தம்மைக் காண வந்திருந்த மனையா ளிடம் அனுப்பினார்.

வேலைக்காரன் போய்ச் சர்க்கரைப் பெருந் தகையின் மனைவியிடம் விஷயத்தைத் தெரிவித் தான். அம்மாதரசியிடம் அப்போது பொருள் சிறிதும் இல்லை. கழுத்தில் கட்டிய தாலி தவிர வேறு ஆபரணமும் இல்லை. எனினும் அவள் சிறிதும் தயங்காமல், தன் தாலியைக் கழற்றி, அந்த ஆள் வசம் கொடுத்தனுப்பினாள்.

சர்க்கரை தாலியைக் கையில் வாங்கி, நீர் வடியும் தம் கண்களில் ஒற்றிக்கொண்டு, புலவ

ரிடம் கொடுத்து, "இது சமயம் அதிகமாகக் கொடுக்க முடியவில்லை. இதுவாவது இருந்தது என் பாக்கியம்; பெற்றுக்கொள்ளுங்கள்" என்று பெருங்கனிவுடன் கவிராயர் கையில் கொடுத்தார்.

புலவர் உள்ளன்புடன் தாலியைக் கையில் வாங்கிக்கொண்டு, சிறைச்சாலையைவிட்டு வெளியில் வந்தார்; தளவாய் ராமப்பையர் அப்போது சங்ககிரியில் தங்கியிருப்பதைத் தெரிந்து, நேராக அவரிடம் சென்றார். கையில் தாலியுடன் கவிராயர் நிற்பதைக் கண்ட தளவாய் விஷயத்தை விசாரித்தார். கவிராயர் சிறிதும் அஞ்சாமல்,

"கொங்கிலி ராமப் பயனதி காரக்
குரூரத்தினுற்
கங்குலி ராப்பகல் சர்வசங் காரஞ்செய்
காலத்திலே
சிங்கநற் சம்பந்தச் சர்க்கரை தேவி
திருக்கழுத்தின்
மங்கலி யந்தனைத் தந்தான் றமிழ்க்கவி
வாணருக்கே"

என்று சர்க்கரையின் வள்ளன்மை நன்கு விளங்கும்படி ஒரு கவியால் சொன்னார். இதனைக் கேட்ட ஐயர், அதிசயமுற்றவராய்ச் சிறையிலிருந்த சம்பந்தச் சர்க்கரையை உடனே



சிறைச்சாலையில் சம்பந்தச் சர்க்கரை, புலவருக்குத் தன் மனைவியின் தாலியைச் சன்மானம் கொடுக்கும் காட்சி [ப. 42

அழைத்துவரச் செய்து, பக்கத்திருத்தி, "ஐயா, தங்களுடைய ஒப்பற்ற வள்ளன்மையை இப்போதே யறிந்தேன்; உத்தம குலத்துதித்த சற்குணர் என்று தெரிந்தேன்; 'சீரியர் கெட்டாலும் சீரியரே' என்பதை மெய்ப்பித்தீர்; உங்களைச் சிறையில் வைத்தது மகா பாவமாகும்; இந்த நிமிஷத்திலிருந்து தாங்கள் விடுதலை பெற்றுவிட்டீர்கள். தாங்கள் கொடுக்கவேண்டிய வரித்தொகையை நாடு செழித்தபின் கொடுங்கள். இதுவன்றித் தங்களுக்கு இஷ்டமானதைக் கேளுங்கள்; என்னாலானதைச் செய்கிறேன்" என்று சொன்னார்.

"ஐயா, நான் மட்டும் விடுதலை பெற்றதில் என் மனம் சமாதானமடையவில்லை. என்னுடன் சிறையிலிருந்துவரும் மற்ற வேளாளர்களையும் விடுதலை செய்யவேண்டும். இதுவே என் விண்ணப்பம்" என்று சர்க்கரை சொன்னார். அவ்விதமே ஏனைய குடியானவர்களும் விடுதலை செய்யப்பட்டார்கள்; நாடு செழித்தபின் வரிகளைக் கொடுக்க அனுமதிக்கப் பட்டனர். சம்பந்தச் சர்க்கரைக்கு மதுரை நாயக்கரின் தளவாய் மேலும் பல சன்மானங்களை அளித்தார். சர்க்கரையும், அவர் மனைவியும், புலவரும் சந்தோஷமாகத் தங்கள் ஊர் திரும்பினர்.

10. தமிழுக்குத் தன் தலையையும் கொடுக்கஇசைந்த வள்ளல் குமணன்

தன்னைத் தேடிவந்த புலவர்களுக்கு "இல்லை" யென்று சொல்லாது, அவர்கள் மனங்களிக்கும் படி கொடுக்கும் கொடையாளிகளுக்கு 'வள்ளல்' என்று பெயர். முன்காலத்தில் தமிழ் நாட்டை அரசு புரிந்த தமிழ் வேந்தர்களைத் தவிரப் பல பிரபுக்களும் தமிழ்ப் புலவர்களை ஆதரித்தனர்.

இவ்வாறு புலவர்களால் புகழப் பெற்ற வள்ளல்கள் 21 பெயர் இருந்தனர். இவர்கள் இருபத்தொருவரையும் அவர்கள் வாழ்ந்திருந்த காலத்தை யனுசரித்து ஆதி காலத்திலிருந்த ஏழு பெயர்களை "முதலெழு வள்ளல்கள்" என்றும், இடைக்காலத்திருந்த எழுவரை "இடை யெழு வள்ளல்கள்" என்றும், கடைக்காலத் திருந்த எழுவரைக் "கடை யெழு வள்ளல்கள்" என்றும் சொல்லுவது வழக்கம். முதலெழு வள்ளல்களில் ஒருவனாகிய குமணனைப் பற்றி இச்சரித்திரம் கூறுகிறது.

தென் கொங்கு தேசத்தில் அமராவதி நதிக் கரையை யடுத்துக் "குமணன்" என்னும் பெயருடைய ஒரு சிற்றரசன் வெகுகாலத்திற்கு முன்

இருந்தான். தற்காலம் கோயமுத்தூர் ஜில்லா உடுமலைப் பேட்டைத் தாலூகாவில் அமராவதிக் கரையில் உள்ள "கொழுமம்" என்னும் ஊரே, முன் குமணனுடைய நகரமாயிருந்தது என்று சொல்லுகிறார்கள். குமணன் ஓர் குறு நில மன்னனாயினும், புலவர்களால் குமணச் சக்கர வர்த்தியென்று புகழப்பட்டிருப்பதால், வீரத்தி லும் கொடையிலும் மிகச் சிறந்தவனென்பது தெரிகிறது. இவனுக்கு "அமணன்" என் றொரு தம்பி இருந்தான். அவன் அண்ணன் குணத்திற்கு மாறுபட்ட குணமுடையவன். வந்தவர்களுக்கெல்லாம் வாரிக்கொடுத்து வரும் அண்ணனுடைய செய்கை இவனுக்குப் பிடிக்க வில்லை. வந்தவர்களெல்லாம் அண்ணனைப் புகழ்ந்து கொண்டாடுவதைப் பார்த்து, இவன் பொறாமை கொண்டான்; அண்ணனிடம் வரும் புலவர்களை அவமதிக்க ஆரம்பித்தான்.

தம்பியின் பொறாமையையும் பெரியோரை அவமதிக்கும் இழிகுணத்தையும் கண்ட குமணன், ஒருநாள் தன் தம்பியை அழைத்து, "அப்பா, இவ்வரசாட்சியை நீயே ஒப்புக் கொள். நான் காட்டுக்குப் போய் வசிக்கிறேன். ஏழைகளை ஆதரி; புலவர்களை அன்புடன் உபசரி" என்று சொல்லி, உடனே நகரத்தைவிட்டு அடுத்

துள்ள மலைக்காட்டை யடைந்து தனிமையில் வசித்து வந்தான்.

அமணன் அரசாட்சியைப் பெற்றதும், அண்ணன் கூறிப்போன நன்மொழிகளுக்கு நேர் மாருக, ஏழைகளை அவமதித்தும் கொடுங் கோன்மை புரிந்தும் வந்தான். குமணனைக் காணுத புலவர்கள், தாயை இழந்த குழந்தைகள் போல் வருந்தினர்; குமணன் வசித்த காட்டுக்குச் சென்று தங்கள் வருத்தத்தைச் சொல்லி அவனுடைய இனிய சொற்களால் ஆறுதலடைந்து சென்றனர். ஏழை ஜனங்களும் நாட்டிலிருந்து குமணன் வசிக்கும் காட்டுக்குச் சென்று, தங்கள் குறைகளைச் சொல்லி வந்தனர்.

தான் அரசனுயிருந்தும் தன்னிடம் வராமல், புலவர்களும் பெரியவர்களும் ஏழை ஜனங்களும், காட்டில் தனிமையில் வசிக்கும் தன் அண்ணனைத் தேடிச்சென்று, அவனுக்கு வேண்டிய உணவுப் பொருள்களை யுதவிவருவதைக் கண்ட அமணன், பின்னும் அதிகமாகப் பொருமையும் கோபமும் அடைந்தான்; தன் அண்ணன் உயிருடன் இருக்கும்வரை தனக்குப் புகழ் வராது என்று எண்ணினுன்; அண்ணனைக் கொன்று விடத் தீர்மானித்தான்; காட்டில் வசிக்கும் கும

ணனுக்கு எவரும் எவ்விதமான உதவியும் செய்யக் கூடாதென்றும் குமணனுடைய தலையைக் கொண்டுவருபவர்களுக்குக் கோடிப் பொன் கொடுப்பதாகவும் நாடு முழுவதிலும் பறை சாற்றுவித்தான்.

கொடியவனுடைய கடுமையான உத்தரவைக் கண்டு நாட்டு ஜனங்கள் அஞ்சினர். கருணை மூர்த்தியாகிய குமணன் தலையைக் கொண்டுவந்து கொடுத்துப் பணம் பெற எவ்வளவு கொடியவனுக்கும் மனம் துணியாது. தன் தலை பறிமுதல் செய்யப்பட்டிருப்பதை யறிந்த குமணன் சிறிதும் துயரப்படாமல், "வருவது வரட்டும்" என்று எப்போதும்போல் இருந்து வந்தான்.

இவ்வாறு காட்டில் தலை மறைவாக வாழ்ந்து வரும்போது ஒரு நாளில், "பெருந்தலைச் சாத்தனார்" என்னும் பிரசித்தி பெற்ற புலவரொருவர் குமணனிடம் வந்தார். வந்த புலவரைக் குமணன் அன்புடன் வரவேற்று, க்ஷேமம் விசாரித்தான். தாமும் தம் மனைவி மக்களும் உண்ண உணவின்றிப் பசியால் துன்பப்படுவதாகவும், என்றும் எவர்க்கும் இல்லை யென்று சொல்லாத குமண வள்ளலைப்பற்றிக் கேள்வியுற்று வந்ததாகவும் புலவர் சொன்னார்.

இதைக்கேட்ட குமணன் மிகுந்த துக்க மடைந்தான். 'அரசனாக இருந்தபோது இவர் வரவில்லையே! இந்தக் கஷ்டகாலத்தில் வந்தாரே! என்ன செய்வது!' என்று பலவாறு நினைத்து வருந்தி, முடிவில் புலவரைப் பார்த்து, "ஐயா, புலவர் திலகமே, நான் அரசு புரிந்திருந்த அந்த நாள் நீங்கள் வரவில்லையே என்று வருந்து கிறேன். இன்று என்னிடம் பொருள் ஏதும் இல்லை. ஆயினும் எனக்கு ஒரு தம்பி இருக்கி றான். இதோ என் கையில் வாள் இருக்கிறது. இந்த வாளால் என் தலையை வெட்டிக்கொண்டு போய் என் தம்பியிடம் காண்பித்தால், அவன் ஒரு கோடிப் பொன் தருவான். அந்தப் பொன் னைப் பெற்று உங்கள் வறுமையைப் போக்குங் கள்" என்று கூறி வாளைக் கொடுத்தான்.

புலவர் குமணனுடைய உத்தம குணத்தைக் கண்டு வியந்து, அவனைப் பன்முறையும் பாராட்டிப் புகழ்ந்து, காட்டைவிட்டு அமண னுடைய நகரத்திற்குப் போனார்; போகும்போது குமணனுடைய தலைபோல் "பொய்த்தலை" ஒன்று செய்து அதைத் துணியில் மறைத்துக்கொண்டு, அமணன் அரண்மனையை யடைந்து, அவன் முன்னிலையில் அதை வைத்து, "ஐயா, அரசரே, உங்கள் தமையனுடைய தலை அந்தத் துணிப்

பைக்குள் இருக்கிறது. பெற்றுக் கொண்டு, நீங்கள் பறை சாற்றி யிருக்கிறபடி, ஒரு கோடிப் பொன்னை எனக்குக் கொடுங்கள்'' என்று கேட்டார்.

இரத்தக் கறை படிந்து துணிப் பையில் இருப்பது தன் அண்ணன் தலையே என்று நம்பிய அமணன், தன் அறியாமையாலும், பொறாமை யாலும் நிகழ்ந்த அநீதிக்கு மிகவும் வருந்தி, அண்ணனை நினைந்து புலம்பினான். யார் என்ன சொல்லியும் அவனுடைய சோகம் தீரவில்லை. அண்ணனைக் கொல்லச் செய்த பாதகத்திற்காகத் தானும் உயிர் விடுவதாக அவன் சொன்னான்.

உண்மையாகவே துயரப்படுவதை யறிந்த புலவர், அமணனைப் பார்த்து, வருத்தப்பட வேண்டாமென்று சொல்லி அவனைக் காட்டிற்கு அழைத்துப்போய்க் குமணனைக்காட்டினார். அண்ணனும் தம்பியும் அன்புற்று மகிழ்ந்தனர். நாட்டிற்குவந்து அரசாட்சியை ஏற்றுக்கொள்ளும்படி அமணன் அண்ணனை வேண்டிக்கொண்டான். அவ்வாறே குமணன் நாடு சென்றான். அவர்கள் புலவருக்கு வேண்டிய பொன் கொடுத்து, மிக்க மரியாதையுடன் அனுப்பினர். குமணன் புகழ் முன்னிலும் பன்மடங்கு பிரகாசித்தது.

---

11. பாலைபாடியபெருங் கடுங்கோ

உலகனைத்தையும் படைத்த பிரமனும், புலவர்க்கு ஒப்பாகான். பிரமன் படைத்த வெற்றுடம்பு மாய்ந்தொழியும்; மற்றிப் புலவர் செய்யும் புகழுடம்பு மாயா. இறவாத புகழ் படைத்த புலவோர்களால் செய்யப்பட்ட தமிழ் நூல்கள் எண்ணிறந்தன. முடியுடை மூவேந்தர் தமிழகத்தில் செங்கோல் செலுத்திய பழங்காலத்தில் தமிழர், பல துறைகளிலும் மேம்பாடுற்று இன்ப வாழ்க்கை நடத்தி வந்தனர். வேந்தர் புலவரைப் பொன்னே போல் போற்றி வளர்த்தனர். செந்தமிழ் நாடாம் பாண்டி நாட்டில், மூன்று சங்கங்கள் இருந்து தமிழை வளர்த்தன. கடைச் சங்கமிருந்து தமிழ் ஆராய்ந்த காலம் இற்றைக்குச் சற்றேறக் குறைய இரண்டாயிரம், வருடங்களுக்கு முன்பாம். முதல், இடை, இரண்டு சங்க கால நூல்களனைத்தும் அழிந்தொழிந்தன வாக, இதுபோது நமக்குக் கிடைத்திருப்பவை, கடைச் சங்கத்தைச் சேர்ந்த புலவர் பலராலும், அவர் காலத்தவராலும் இயற்றப் பட்ட நூல்களே.

சங்க நூல்களில் குறள், சிலப்பதிகாரம், மணிமேகலை, பத்துப் பாட்டு, எட்டுத் தொகை என்பன மிகச் சிறந்தவை. இவற்றுள் எட்டுத் தொகையாவன: (1) நற்றிணை (2) குறுந் தொகை (3) ஐங்குறு நூறு (4) பதிற்றுப் பத்து (5) பரிபாடல் (6) கலித் தொகை (7) அகநானூறு (8) புற நானூறு. இவற் றுட் கலித் தொகை என்பது, "கற்றறிந்தார் ஏத்தும் கலி" எனப் போற்றப்படும் அரியதோர் அகப் பொருள் நூலாகும். பாவினம் நான்கி னுள் கலிப்பாவினு லியன்ற இப் பெருநூல், கற்போ ருள்ளத்தைக் கொள்ளை கொள்ளும் சொற் பொருள் இன்பம் வாய்ந்தது. கடவுள் வாழ்த்து 1-ம், பாலைக்கலி 35-ம், குறிஞ்சிக் கலி 29-ம், மருதக் கலி 35-ம், முல்லைக் கலி 17-ம், நெய்தற் கலி 33-ம், ஆக மொத்தம் 150 செய்யுட்கள் கொண்டது. ஐந்திணை நிலத் தின் இயற்கை, அந்நில மக்களின் பழக்க வழக்கங்கள், நிலத்திற்குரிய ஒழுக்க வேறுபாடு கள், மக்கள் இளமையிலும், முதுமையிலும் அறிந்தொழுக வேண்டிய நீதிகள் முதலிய பல விஷயங்களைத் தூய தனித் தமிழில் நயம் பட எடுத் துரைப்பது.

"திருத்தகு மாமுனி சிந்தா மணிகம்பன்
விருத்தக் கவிவளமும் வேண்டேம்—திருக்குறளோ
கொங்கு வேண் மாக்கதையோ கோள்ளேம் நனியார்வோம்
பொங்குகலி யின்பப் பொருள்."

என்று பிற்காலப் புலவர்களால் புகழப் பட்ட சிறப்புடைய இத்தொகை நூலில் ஒரு பகுதியாகிய பாலைக் கலி 35ம் பாடி யருளிய புலவர் பெருமான் "சேரமான் பெருங் கடுங்கோ" என்னும் அரசராவர். இவர் பொருனை (அம ராவதி) பொன்னியாற்ருேடு கலக்கும் இடத்தி லுள்ள வஞ்சி மாநகர் எனப்படும் கருவூரில் அரசு செய்த சேர மரபினர்; கொடையும், வீர மும் உடையவர்; கவி இயற்றுவதில் வல்லவர்; பாலைக் கலியை மிகச் சீரிய முறையில் பாடியத ஞலே இவர் "பாலை பாடிய பெருங் கடுங்கோ" என்ற சிறப்புப் பெயரும் பெற்ருர். இவர் வாழ்க்கையைப் பற்றிய வரலாறு அதிகமாய் விளங்கவில்லை யாயினும் இவர் கருவூரில் இருந் தாரென்பதும், சேர அரச பரம் பரையைச் சேர்ந்தவரென்பதும், உள நூல், விலங்கு நூல், மர நூல் முதலிய நுண்கலை ஆராய்ச்சி உடையவ ரென்பதும், வள்ளன்மையில் சிறந்தவரென் பதும் தெரிகின்றன.

இவரைப் பேய்மகள் இளவெயினி பாடி யிருக்கின்றனர். அவர் புறம் 11ம் பாட்டில்

கூறி யிருப்பதாவது :- "ஐயா! தூய ஆபர ணத்தை யணிந்த பேதை மகளிர் பொருனை யாற்றின் கரையில் ஒதுக்கப் பட்ட மணல்திட் டில் சிறு வீடு கட்டி, வண்டல் மண்ணுல் பாவை செய்து, அப் பாவைக்குக் கரையோரமாக வளைந்து பூத்த மரங்களிலிருந்து பூவைப் பறித்துச் சூட்டியும், பொருனை யாற்றின் குளிர்ந்த நீரில் குதித்து விளையாடியும், புகழ் சிறக்கும் கருவூரின் கண் பாடுதற்கமைந்த வெற்றியை யுடைய அரசன் நீயே, பகைவரின் வெம்மை யுடைய அரணையழித்து, எதிர்த்தவருடைய புறக் கொடையைப் பெற்ற அரசனது வீரத் தைப் பாடிய பாடினி சிறந்த அணிகலத்தைப் பெற்ருள். அவ் வணிகலத்தைப் பெற்ற விறலி யுடன் பாடிய பாணனும் பொற்ருமரையாகிய பூவைப் பெற்ருன்."

இவர் தாம் பாடிய பாலைக் கலியில் எடுத்துக் கூறும் உபமானங்களை மிகச் சாதாரண மான பொருள்களைக் கொண்டு சுவை மிகுந்த முறையில் எடுத்துக் கூறி யிருக்கின்றனர். தலைவனைப் பிரிந்த தலைவியின் நிலையை, "வாடிய அணி மலர்," "இறைஞ்சிய பூங்கொடி," "வாடிய தளிர்கள்" முதலியவற்றிற்கும் (பாலை 3வது செய் யுள்) விழவாற்றுப் படுத்தபின் புல் என்ற களத்

துக்கும், ஆள்பவர் கலக்குற அலை பெற்ற நாட்டிற்கும், நீர் நீத்த மலர்க்கும் (பாலை 5வது செய்யுள்) உவமித்திருக்கிறார். காட்டின் கடுமையை நடுநிலைமை நீங்கிக் கொடுங்கோலோச்சும் மன்னனின் நாட்டிற்கும் (கலி 8வது செய்யுள்) வறியவன் இளமைக்கும் (கலி 10வது செய்யுள்) மிக நயம் பட வருணித் திருக்கிறார்.

12. அதிகமான் நெடுமான் அஞ்சி

ஏறக்குறைய இரண்டாயிரம் வருஷங்களுக்கு முன் கொங்கு நாட்டைப் பல சிற்றரசர்கள் ஆண்டு வந்தனர். அவர்கள் ஆங்காங்கு அரண்கள் அமைத்து அவற்றைச் சுற்றியுள்ள பிரதேசங்களை ஆண்டு வந்தனர். இக்குறு நில மன்னர்களுள் மிக்க புகழ் படைத்தவர் தகடூரைத் தலைநகராகக் கொண்டு ஆட்சி புரிந்த அதிகமான் பரம்பரையினர் ஆவர். இவ்வதிகமான்கள் காவிரி நதியின் கிழக்கிலுள்ள கீழ்க் கொங்கு எனப் படும் சேலம் ஜில்லாவின் தற்கால தருமபுரி என்ற ஊரிலிருந்து நாமக்கல் வரையிலும் ஆட்சி புரிந்ததாகத் தெரிகிறது. தருமபுரிக் கோயிலிலுள்ள கல் வெட்டுகளிலிருந்து அவ்வூர் பண்டைய "தகடூர்" என்பது உணரப்படுகிறது. நாமக்கல்லிலுள்ள குகைக்கோவில் ஒன்றுக்கு "அதியேந்திர விஷ்ணுக் கிரகம்" என்ற பெயர் இருப்பதிலிருந்து அக்கோயில் ஒரு அதிகமானுல் ஆக்கப் பட்டதென்று ஊகிக்கப் படுகிறது. எனவே அதிகமான் பரம்பரையினர் சேலம் ஜில்லாவில் வடக்கே தருமபுரியிலிருந்து, தெற்கே நாமக்கல் வரையுள்ள பிரதேசத்தைப் பண்டு பல நூற்றுண்டுகள் ஆட்சி புரிந்தார்கள் என்பது உறுதியாகப் பெறப்படுகிறது.

அதிகமான்களைப் பற்றி ஔவையார், பெருஞ்சித்திரனுர், அரிசில்கிழார், பொன்முடியார், பரணர் முதலிய பல புலவர்கள் பாடியிருக்கின்றனர். சங்க காலத்துப் புலவர்களால் பாடப்பட்ட முதல் அதிகமான் கடையேழு வள்ளல்களில் ஒருவனும், வீரத்திலும் கொடையிலும் மிகச் சிறந்தவனுமாகிய “அதிகமான் நெடுமானஞ்சி” என்பவன். இவனுடைய பரம்பரையினர் கி. பி. எட்டாவது நூற்றாண்டு வரை தகடூரில் ஆண்டு வந்ததாகச் சொல்லலாம். மதுரைப் பாண்டிய மன்னர்களின் கல்வெட்டுகளில் அதிகமான்களைப் பற்றி அடிக்கடி கூறப்பட்டுள்ளது. பாண்டியர் சாஸனங்களில் அதிகமான்கள் “கொங்கு மன்னர்” என்றே குறிப்பிடப்பட்டிருக்கின்றனர். வேள்விக்குடி சாஸனத்தில் “ஜடிலன் நெடுஞ்சடையன் பராந்தகன்” என்ற பாண்டியன் கொங்கு மன்னர்களைப் போரில் வென்றதாகவும் மற்றொரு சாஸனத்தில் இப்பாண்டியன் (ஜடிலன் நெடுஞ்சடையன் பராந்தகன்) தகடூர் அதிகமானை ஐயிரூர், புகலியூர், ஆயிரவேலி என்ற இடங்களில் முறியடித்ததாகவும் கூறப்பட்டுள்ளன. பாண்டியன் நெடுஞ்சடையன் பராந்தகன், வேள்விக்குடி சாஸனம் பொறித்த காலம் கி. பி. 769 —770. ஆகையால் அதிகமான் வம்சத்தினர் கீழ்க் கொங்கிலுள்ள தகடூரில் தங்கிச் சங்க

காலம் தொடங்கி கி. பி. 770-ம் ஆண்டு வரை ஆட்சி புரிந்து இருந்ததாக அறிகிறோம்.

இம்மன்னர் பரம்பரையில் சங்க காலத்திலிருந்தவனும், புலவர் பலரால் பாடப்பட்டவனும், பாரி, ஓரி, காரி, பேகன், நள்ளி, ஆய் ஆகியவர்களுடன் சமமாக வள்ளல் எனச் சிறப்பிக்கப்பட்ட இணையற்ற வீரனும் ஆகிய அதிகமான் நெடுமானஞ்சியைப் பற்றிய சில செய்திகள் புறநானூற்றுச் செய்யுட்களினின்று அறியக் கிடக்கின்றன. அவற்றின் சுருக்கம் வருமாறு:—

அதிகமான் நெடுமானஞ்சியின் ஊர் தகடூர்; அவனது மலை குதிரை மலை; அவன் மாலை பனந் தார் மாலை; சேரமானுக்கு உறவினன். இவனது முன்னோர் தேவர்களைப் போற்றி வழிபட்டுப் பெறுதற்கரிய கரும்புப் பயிரை விண்ணுலகத்தினின்றும் இம்மண்ணுலகத்திற்குக் கொண்டு வந்து பயிராக்கினர். அதிகமானுடைய வீரத்தைப் பற்றி ஔவையார் பல செய்யுட்களில் புகழ்ந்து கூறியிருக்கிறார். "புலி சீறின் எதிர் நிற்க வல்ல மானினமும் உளவோ! ஞாயிறு கொதித்தெழுமாயின் ஆகாயத்திலும் திசைகளிலும் இருள் நிற்குமோ, மணற் பறக்கவும், கற் பிளக்கவும் நடக்கவல்ல மனச் செருக்கினையுடைய

கடா போதற்கரிய துறையும் உண்டோ? இல்லை. அவை போல, முழங்காலைத்தொடும் தடக்கையை யுடையவீரர் தலைவ! நீ போர்க்களம் புகின் உன் மண்ணைக் கொண்டு ஆர்க்கும் வீரரும் உளரோ?! இல்லை.'' (புறம்-90)

“அவன் வாள், பகைத்தவர்களுடைய அரணை அழித்து அவர்களுடைய தசையில் உறக்குளித்துக் கதுவாய் போய் வடிவிழந்தன; அவன் வேல்கள், குறும்பர் சேர்ந்த அரண்களை வென்று பகைவர் நாட்டை அழித்தலால் சுரை யோடு பொருந்திய ஆணிகலங்கி நிலைகெட்டன; அவன் களிறு, கதவுகளைத் தகர்த்து, பகைவரது களிற்றையுடைய அரண்களை அழித்தலால் தம் கொம்புகளில் அணியப்பட்டிருந்த பூண்கள் கழன்றன; அவன் குதிரை பகை வீருடைய மார்பு உருவழிய ஓடுதலால் ரத்தத்தில் தோய்ந்து மறுப்பட்ட குளம்பை உடையவாயின; அவன் தானும், கடல் போன்ற படையுடனே பொன்னு லான தும்பைக்கண்ணியையும், அம்புபட்டுத் துளைபட்ட கேடகத்தையும் உடையன். அவ் விடத்து அவனல் வெகுளப்பட்டவர் எவ்வாறு பிழைப்பர்? உங்கள் பழமையான ஊர் உங்கட்கு உரித்தாகவேண்டுமாயின் உடனே சென்று அவ னுக்குத் திறை கொடுத்தல் வேண்டும்; கொடீரா யின் அவன்விடான்; வெல்லும் பூசலையுடையான்;

யான் சொல்லியும் அறியாது போர் செய்யத் துணிவீராயின் உங்களுடைய உரிமை மகளிரது தோள்களைப் பிரிந்து உறைதல் வியப்பாகாது. இதை எண்ணிப் போர் செய்மின்'' (புறம்-97)

இவன் கோவலூர் மலையமான் திருமுடிக் காரியைப் போரில் வென்றான். போருக்கஞ்சா வீரனாயினும் பக்கத்து நாட்டு மன்னர்களுடன் சமாதானமாகவே வாழ விரும்பினான். காஞ்சியை ஆண்ட தொண்டைமானிடம் சமாதானத்துடன் வாழ விரும்பி அவனிடத்து ஔவையாரைத் தூதாக அனுப்பினான். காஞ்சித் தொண்டைமானிடம் சென்று இருந்த ஔவைக்கு, அவன் தன்னுடைய படைக்கலச் சாலையைக் காட்டிய போது ஔவையார் தன்னுடைய இறைவன் அஞ்சியின் வென்றிச் சிறப்பு விளங்கச் சொன்னதாவது:—

"காவலையுடைய விசாலமான இக் கொட்டிலில் உள்ள படைக் கலங்கள் பீலி அணியப் பட்டு, மாலை சூட்டப் பட்டு, எண்ணெய் தடவப்பட்டு அழகுபட இருக்கின்றன. ஆனால் எனது வேந்தனின் வேல்கள் பகைவரைக் குத்துதலால் கங்கு நுனியும் முறிந்து, கொல்லனுடைய பணிக்களரியில் சதா காலமும் பழுது பார்க்கப் பட்டுக் கிடக்கின்றன.'' (புறம் 95)

பகைவர் உயிரை உண்ணும் கூற்றத்தை ஒப்பவன் ஆயினும் தன்னை அடைந்தார்க்கும், புலவர்க்கும், பரிசிலர்க்கும், மிக எளியவன். ஏற்போர்க்கு எந்நாளும் இல்லை என்னாது அளிக்கும் அருளுடை வள்ளலாவான். இவனிடம் ஒப்பற்ற அன்புடையவர் ஔவையார். ஔவையாரிடம் இவனுக்கும் அளவு கடந்த மதிப்புண்டு. கொடுக்கும் பொருளின் அருமையை எண்ணாது ஆடம்பரமின்றி அளிக்கும் வள்ளன்மை வாய்ந்தவன்.

உண்டவற்கு இறப்பைத் தவிர்க்கும் அமுதம் போன்றதும், பெறுதற்கு மிக அரிதானதும், பெரிய மலையின் கற் பிளவில் அரிய உச்சியில் தோன்றும் சிறிய இலையினையுடைய நெல்லி மரத்தின் இனிய கரு நெல்லிக் கனி ஒன்று நம் அதிகமானுக்குக் கிடைத்தது. அதனை உண்பதாற் பெறும் பெரும் பேற்றினை உணர்ந்தும் தான் உண்ணாது, ஔவையாரைக் கண்டதும் அவரிடம் அதன் குணத்தைத் தெரிவிக்காமலே அவருக்கு அதை மிகப் பரிவுடன் அளித்தான். இதனினும் சிறந்த கொடையுண்டோ? இதனைப் பெற்ற ஔவையாரும் அந்தக் கனியை உண்டு, பிறகு அதன் அரிய தன்மையை அறிந்து, அஞ்சியின் கொடையை

வியந்து அவனைப் "பிறை சூடிய நீலகண்டப் பெருமானைப் போல் நீ என்றும் நிலை பெறு வாயாக" என்று வாழ்த்தினர் (புறம் 91)

குன்றும் மலையும் காடும் சுரமும் கடந்து வந்த புலவர், பரிசிலர், பலர்க்கும் பல நாளும் சலியாதளித்துக் குன்றுப் புகழ் படைத்த நெடு மானஞ்சி, ஒரு சமயம் தன்னாட்டு எல்லையி லுள்ள கொல்லி நாட்டை யாண்ட "வல்வி லோரி"யின் மீது சேரமான் படையெடுத்து வரத் தன் நண்பனாகிய ஓரியின் உதவிக்குச் சென்றான். ஆங்குச்சேரமானுடன் நிகழ்த்திய பெரும்போரில் தோற்றுத் தகடூர்க் கோட்டைக்குத் திரும்பினான். சேரமான் இவனைப் பின் தொடர்ந்து தகடூரை அடைந்து முற்றுகையிட்டான். கோட்டையி லிருந்து கடும்போர் புரிந்தும் சேரனைத் தோற் கடிக்க முடியாமல் நெடுமானஞ்சி இறந்து பட் டான். முற்றுகையின் போது இவனுடன் கோட்டையுள்ளிருந்த ஔவையார் மனம் நொந்து சொன்னதாவது:—

"சிறிது மதுவைப் பெற்ற போது அதை எங்களுக்குத் தருவன்; பெரிய அளவு கிடைத்த போது அதனை யாம் உண்டு பாட, எஞ்சியதைத் தான் விரும்பி நுகர்வன்; சோறு எல்லோர்க்கும் இன்றியமையாது வேண்டுமாதலின் சிறிது

சோறு உள்ள காலத்தும் பலரோடுகூட இருந்து உண்பான்; என்போடு கூடிய ஊன் தடிகளாகிய பேடிகளுள்ள இடமுழுதும் எங்களுக்குத் தருவன்; அம்போடு வேல் தைத்து உருவுமிடமாகிய போர்க்கள முழுதும் தான் சென்று நிற்பன்; பூநாறும் தன் கையால் புலால் நாறும் என் தலையைத் தடவுவன்; அவையெல்லாம் கழிந்தனவே! அவன் அரிய மார்பில் தைத்தவேல், பாணரது அகன்ற மண்டையைத் துளைத்து, இரப்பவர் கைகளை ஊடுருவிப்போய், தன்னால் புரக்கப்படும் சுற்றத்தார் கண்களின் ஒளிமழுங்கச் செய்து, அழகிய சொல் ஆராயும் அறிவுடைப் புலவர் நாவிலும் போய் விழுந்தது. எமக்குப் பற்றுகிய எம் இறைவன் எவ்விடத்துள்ளான் கொல்! இனிப்பாடுவாரும் இல்லை. பாடுவார்க்கு ஈவாரும் இல்லை! (புறம்-235)

"அவனை யின்றிக் கழியும் நாள் இனி இல்லையாகுக! அவனின்றி யான் வாழும் நாள் எனக்கு ஓர் பயனும் படாமையின் அவை அல்லன வாகுக! நாடுடன் கொடுப்பினும், கொள்ளாத எம் வேந்தன், நடுகல்லுக்குப் பீலி சூட்டி, மணமுள்ள மதுவைச் சிறிய கலையத்து உகுப்பக் கொள்வன் கொல்லோ?" (புறம்-232)

நெடுமானஞ்சி இறந்த பின் ஔவையார் அவன்மகன் "அதிகமான் பொகுட்டெழினி"க்கு முடிசூட்டி வாழ்த்திச் சென்றார்.